# மித்ரா டைம்ஸ்


தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர்: VIII இதழ்: 1 | ஜூன் 2022 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ. 20/- |
| Vol.: VIII Issue: 1 | June 2022 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20 |




பெருமைமிகு பெண் விவசாயி!



இதழியல் பயணம் தொடர்கிறது!

-ஆசிரியர் கடிதம்



படைப்பாளி வீட்டின் எளிய திருமணம்!

ஐவர் மலை அய்யர் மலை ஆனது!

## பிரதமர் மோடியுடன் முதல் முறையாக மு.க.ஸ்டாலின் பங்கேற்ற அரசு விழா!

-நேரு மைதானத்தில் நடந்த அரசியல் விளையாட்டு!

# ஆசிரியர் பங்குபெற்ற கும்பாபிஷேக நிகழ்ச்சி!



காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் வழியாக திருப்பதி செல்லும் சாலையில் அமைந்துள்ள கிராமம் சூரம். இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ லட்சுமி நாராயண பெருமாள் கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சி மே 23,24,25 ஆகிய தேதிகளில் சிறப்பாக நடந்தேறியது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மித்ரா டைம்ஸ் ஆசிரியரும் மித்ரா குழும நிறுவனங்களின் தலைவருமான திரு எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் தமது குடும்பத்தினருடன் பங்குபெற்று தரிசனம் செய்தார். அவருக்கு கும்ப கலச மரியாதை, விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த ரங்கசாமி அவர்கள் ஏற்பாட்டில் விழா கமிட்டி சார்பாகவும் பொது மக்கள் சார்பாகவும் செய்யப்பட்டது.

# இதழியல் பயணம் தொடர்கிறது!

**அ**ன்புடையீர்! வணக்கம்.

மித்ராடைம்ஸ் மாத இதழ் ஏழு ஆண்டுகளை கடந்து எட்டாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கும்போது சற்று மலைப்பாகத் தான் இருக்கிறது. ஏனென்றால் நான் பரம்பரை எழுத்தாளன் அல்ல. பத்திரிகையாளரும் அல்ல. ஆனால் ஒரு பத்திரிக்கையில் என்னென்ன இடம்பெற வேண்டும், அது எந்த வகையில் எல்லோருக்கும் பயன்படவேண்டும் என்று ஒரு வாசகனாக நான் அறிந்து வைத்திருக்கிறேன்.

2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த இதழ் நண்பர் ஒருவருக்காக தொடங்கப்பட்டது. அவர் தனியே இதழ் தொடங்கி விட்டதால் நானே மித்ரா டைம்ஸ் இதனை தொடர்ந்து நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது.

30 ஆண்டுகளாக கட்டுமானத்துறை நிறுவனத்துடன் பிற நிறுவனங்களை இணைத்து மித்ரா குழும நிறுவனங்கள் நடத்தி வருகிறோம். இதன் மத்தியில் இந்த மாத இதழை நடத்தி வருகிறேன்.

மாத இதழ் துவக்கும் போதே அதில் என்னென்ன இடம்பெற வேண்டும் என்னென்ன இடம்பெறக்கூடாது என்று ஒரு கொள்கையாகவே வைத்து இருக்கிறோம். அந்த கொள்கையில் இருந்து இதுவரை கொஞ்சமும் நாங்கள் மாற்றிக் கொள்ளவில்லை.

* யார் மீதும் காழ்ப்புணர்ச்சியோடு எழுதக்கூடாது

*தேவையற்ற செய்திகளை போட்டு மக்களை குழப்பக் கூடாது

* இந்த இதழைப் படித்தால் தாங்கள் இதை கற்றுக் கொண்டோம் அல்லது இதை தெரிந்து கொண்டோம் என்று படிக்கும் ஒவ்வொருவரும் நினைக்கும் வகையான செய்திகள் மட்டுமே இடம்பெற வேண்டும்.



## என்ணம்

பல்சுவை செய்திகள் இடம்பெறும் அதேவேளையில் படிப்பவர்களுக்கு தாங்களும் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கும் வகையில் சமூகத்தில் வெற்றி பெற்ற அல்லது கடுமையாக உழைத்த ஆண்கள், பெண்கள், தொழிலதிபர்கள் பற்றிய செய்திகளை வெளியிடுவோம்.

இப்படியாக ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் எல்லை வகுத்துக்கொண்டு அதை இன்று வரை கடைப்பிடித்து வருகிறோம். எனவேதான் இதை முதன்முதலில் படிக்கின்ற யாரும் சொல்லுகின்ற வார்த்தை "அருமையாக இருக்கிறது" என்பதுதான். முதல் முறை படித்தவர்கள் தொடர்ந்து இதழை தாங்களாகவே கேட்டு வாங்கிப் படிக்கிறார்கள். இது எங்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

எந்த ஒரு செயலும் தொடர்ந்து செய்யும்போது அது காலத்திற்கு ஏற்றவாறு மாறி வருவது இயல்பு. அந்த வகையில் நம்முடைய மித்ரா டைம்ஸ் மாத இதழ் இன்றைய சூழலில் printmedia என்று சொல்லப்படும் அச்சு இதழைத் தாண்டி இணைய வழியாக Facebook, Twitter, Instagram என்று அடுத்த கட்டத்தை நோக்கி செல்கிறது அதற்கான குழுவை நியமித்து உள்ளோம். மித்ரா டைம்ஸ் இதழின் தொடர் பயணத்துக்கு அந்த குழு எங்களோடு பயணிக்கிறது. வழக்கம் போல உங்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறேன்.

கடந்த 7 ஆண்டுகளாக என்னுடைய பத்திரிக்கை பயணத்திற்கு துணை நின்ற எனது குடும்பத்தினர், நண்பர்கள் ஆசிரியர் குழுவினர், அலுவலகத்தினர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**– எம்.எஸ்.மூர்த்தி**

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 08 ஜூன் 2022 டைம்ஸ் - 1

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
கலைமாமணி **நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர் குணசேகரன்**

செய்தியாளர்கள்
**ஆர்.ஹரி பாபு, பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**கவி சுகந்தீனா /துடுப்பதி ரகுநாதன்**

இணையதள செய்தியாளர்
**பொன்.சாம்பசிவம்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08
அலுவலகம்:
**உமா மகேஷ்வரி** - 9884295482
**ஆர்.நந்தினி** - 9884295328

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

**82485 85067**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com


# உள்ளே...




பிரதமர் மோடியுடன் முதல் முறையாக மு.க.ஸ்டாலின் பங்கேற்ற அரசு விழா! 7
-நேரு மைதானத்தில் நடந்த அரசியல் விளையாட்டு!



**பானி பூரி விற்பவனை மட்டும் வைத்து எடை போடாதீர்கள்! வடமாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் வளர்ந்தது எப்படி?** 13



இலங்கையின் இன்றைய நிலைமை! ஆட்சியாளர்களுக்கு ஒரு எச்சரிக்கை மணி! 18



கொத்தமல்லி கொசுறு கேட்காதீர்கள்! 34




லாபம் தரும் இயற்கை விவசாயம்! 43



உச்சநீதிமன்றத் தீர்ப்பும், கவர்னரின் அதிகாரமும்! 48
-துடுப்பதி ரகுநாதன்

# பெருமைமிகு பெண் விவசாயி!






பெண்கள் நினைத்தால் எந்த துறையிலும் பிரகாசிக்க முடியும் என்பதை நிரூபித்து வருகிறார்கள். விவசாய தொழில் என்பது சவாலான தொழில் என்பதால் அந்த தொழிலில் இருந்து ஆண்கள் வெளியேறுவது மட்டுமல்ல, தங்களுடைய நிலங்களை ரியல்எஸ்டேட் நிறுவனங்களுக்கு விற்று விட்டு விவசாயத்தை மறந்து விட்டார்கள். ஆனால் நெல்லையைச் சேர்ந்த ஒரு பெண்மணி தன்னுடைய கனவு லட்சியம் எல்லாமே தான் ஒரு விவசாயி ஆவதுதான் என்று முடிவெடுத்து அதற்காக தான் பார்த்து வந்த மத்திய அரசு வேலையில் விட்டுவிட்டு முழுநேர விவசாயியாக மாறியிருக்கும் பா.லட்சுமிதேவி அவர்களை சந்தித்தோம். அவர் பேட்டியிலிருந்து...



"நான் பிறந்தது நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம், முக்கூடல் அருகிலுள்ள வடக்கு அரியநாயகிபுரம் கிராமம். உயர்நிலைக் கல்வி, இளங்கலை வேதியியல் , இளங்கலை நூலகவியல், முதுகலை ஆங்கில இலக்கியம் என்று படித்து முடித்த பின் மத்திய அரசின் BSNL நிறுவனத்தில் 27 ஆண்டுகள் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றேன்.

ஆனால் எனக்கு பள்ளிப்பருவத்தில் இருந்தே விவசாயம் என்பது வேட்கையாக இருந்தது.

விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாத நிலையில் ஒரு சிறிய நிலத்தை

வாங்கினேன். ரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை முறையில் நஞ்சில்லா உணவு மட்டுமே பயிர் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் விவசாயம் செய்ய ஆரம்பித்தேன். ஆனால் மற்றவர்கள் அறுவடை செய்யும்போது 15 மூட்டைகள் கிடைக்கும்போது எனக்கு ஒண்ணரை மூட்டை மட்டுமே கிடைக்கும். ஆளாளுக்கு புத்திமதி சொன்னார்கள். கேலி பேசினார்கள். அவ நம்பிக்கை தந்தார்கள். நான் மனம் தளரவில்லை. என் கணவரும் நீ முயற்சி செய் நிச்சயம் வெற்றிபெறுவாய் என்று ஊக்கப்படுத்தினார்.

தொடர்ந்து முயற்சி செய்து மூன்று மூட்டைகளை 5,6,10 என்று படிப்படியாக விவசாயத்தில் வளர்ச்சியை எட்டினேன். எல்லோரும் ஆந்திரா, பொன்னி, கர்நாடகா பொன்னி என்று ஒட்டு ரகங்களை பயிர் செய்துவந்த நிலையில் நம்முடைய தமிழ்நாட்டின் பாரம்பரிய ரகத்தை பயிர் செய்யலாமே என்று செய்தேன்.



கடந்த வருடம் ஜனவரி மாதம் மாவட்ட ஆட்சியர் திரு விஷ்ணு அவர்கள் என்னுடைய வயலை பார்வையிட்டார்கள்.



ATMA திட்டத்தில் சிறந்த விவசாயிக்கான விருதை அறிவித்து அதை அம்பாசமுத்திரம் வேளாண்மை அலுவலகத்தில் வேளாண்மை இயக்குனர் அவர்களால் வழங்கப்பட்டது. தற்போது பாரம்பரிய விதைகள் பரவலாக்கத்திற்காக 37 வகையான நெல் விதைகளை பல மாவட்ட விவசாயிகளிடம் இருந்து பெரும் முயற்சி எடுத்து சேகரித்து வேளாண்மை கூடுதல் இயக்குனர் திருமுருகன் அவர்கள் தொடங்கி வைக்க விதைநேர்த்தி நாட்டு விடப்பட்டது.

நாம் வாழும் பூமிக்கு... நம் தாய் நாட்டிற்கு நாம் ஏதாவது நன்மை செய்ய வேண்டும்... நாம் செய்வது அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும்... பூமியை பாதுகாப்போம்... தேசத்தை பாதுகாப்போம் என்று என்று மகிழ்ச்சியோடு சொல்லி முடித்தார் லட்சுமிதேவி பாலசுப்ரமணியம்.



நெல்லைக்கு இனிமைத் தமிழும் சுவையான அல்வாவும் அடையாளம் என்பதுபோல இனி அம்பாசமுத்திரம் லட்சுமிதேவி பெருமைக்குரிய பெண் விவசாயி ஆக பேசப்படுவார். அவருடைய முயற்சி மேலும் மேலும் வெற்றி அடைய மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

**– சுஜாதா மூர்த்தி**

# பிரதமர் மோடியுடன் முதல் முறையாக மு.க.ஸ்டாலின் பங்கேற்ற அரசு விழா!

## - நேரு மைதானத்தில் நடந்த அரசியல் விளையாட்டு!



தமிழகத்தில் 31,000 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும், நிறைவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து நாட்டுக்கு அர்ப்பணிக்கவும் பிரதமர் மோடி சென்னை வந்தார். தனி விமானம் மூலம், மாலை 5 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்தடைந்த அவரை ஆளுநர் ஆர்.என்.ரவி, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

சென்னை விமான நிலையத்திலிருந்து ஐ.என்.எஸ்., அடையாறு கடற்படைத் தளத்திற்கு, ஹெலிகாப்டர் மூலம் பிரதமர் மோடி வந்தடைந்தார். அதனைத் தொடர்ந்து, நேரு உள்விளையாட்டரங்கிற்கு காரில் சென்ற பிரதமர் மோடிக்கு வழியெங்கிலும் பாஜக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வழி நெடுக பாஜக தொண்டர்கள் காவி நிற ஆடைகளை அணிந்தும், பச்சை மற்றும் ஆரெஞ்ச் நிற பலூன்களை கைகளில் ஏந்தியும் ஆரவாரத்துடன் கோஷங்களை எழுப்பியபடி உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, சிவானந்தா சாலையில் காரின் கதவை திறந்து அதிலிருந்து எழுந்து நின்ற பிரதமர் மோடி, பொதுமக்களை நோக்கி கையசைத்து மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், பிரதமர் மோடி முதலமைச்சர் ஸ்டாலின் இருவரும் ஒரே மேடையில் கலந்துகொண்டனர். அப்போது, அரங்கத்தில், பிரதமர் நரேந்திர மோடியை வாழ்த்தியும், போற்றியும் பாஜகவினர் கோஷம் எழுப்பினர். அதனைத்தொடர்ந்து,திமுக தொண்டர்கள்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை போற்றி கோஷங்களை எழுப்பினர். இவ்வாறு மாறி மாறி கோஷம் எழுப்பியதால் அரங்கத்தில் பரபரப்பு நிலவியது

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்த விழாவில் முதலமைச்சர் ஸ்டாலின் முன்னிலை உரையாற்றினார். அப்போது பேசிய அவர், திமுக ஆட்சி பொறுப்பேற்றபிறகு பிரதமர் மோடி பங்கேற்கும் முதல் அரசு விழா இது.

வீட்டுவசதித் திட்டம் மூலம் கட்டப்பட்ட 1,152 இலகுரக வீடுகளை பிரதமர் மோடி திறந்துவைத்தார். இதைத்தொடர்ந்து, பயனாளிகளுக்கு வீட்டு ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை வழங்கினார்.

அப்போது, பயணாளிகள் சிலருக்கு பிரதமர் மோடி, வீடுகளுக்கான சாவியை கொடுத்தார். அந்த சமயத்தில் முதல்வர் ஸ்டாலின் விலகி நின்றார். எனினும், விலகி நின்ற முதல்வர் ஸ்டாலின் கையைப் பிடித்து, அழைத்து பயணாளிகளுக்கு சாவி கொடுக்க வைத்தார் பிரதமர் மோடி.

மேடையில் முதல்வர் ஸ்டாலினுக்கு முக்கியத்துவம் அளித்து பிரதமர் அவர் கையை பிடித்து அழைத்து சாவியை கொடுக்க வைத்த நெகிழ்ச்சி சம்பவத்தின் வீடியோ காட்சிகள் தற்போது சமூகவலைதளங்களில் வைரலாக





பரவியது.

இந்தியாவின் ஒட்டு மொத்த வளர்ச்சி விகிதத்தில் 9 சதவீதம் ; மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 6 சதவீதம்;மொத்த ஏற்றுமதியில் 8.4 சதவீதம்; ஜவுளித்துறை ஏற்றுமதியில் 19,4 சதவீதம்; கார்கள் ஏற்றுமதியில் 32.5 சதவீதம்; தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 சதவீதம் தமிழகத்தின் பங்களிப்பு உள்ளது. ஆனால், மத்திய அரசின் வரி வருவாயில் தமிழகத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுவது 1.21 சதவீதம் மட்டுமே" என்று பிரதமர் கலந்து கொண்ட விழாவில் பேசினார் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இந்த விழாவில் வரவேற்புரை ஆற்றிய மத்திய அமைச்சர் எல்.முருகன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெயரைச் சொன்னதும், திமுக தொண்டர்கள் ஆர்ப்பரித்தனர். இதனால் அவர் சற்று இடைவெளி விட்டுப் பேசினார். பின்னர் முதல்வர் ஸ்டாலின் பேச எழுந்ததும் மீண்டும் தொண்டர்கள் உற்சாக ஆரவாரம் செய்தனர்.

பிரதமர் மோடி பங்கேற்றிருக்கும் மேடையிலேயே மத்திய பாஜக அரசை 'ஒன்றிய அரசு' என முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து பேசியதற்கு திமுக தொண்டர்கள் ஆரவாரம் செய்தனர். மேலும் பிரதமரே என்று அழைத்தபடி, திராவிட மாடல் குறித்து ஸ்டாலின் விளக்கி கூறியதை திமுகவினர் சமூக வலைத்தளங்களில் பாராட்டி வருகிறார்கள்.

**- கே.கலியபெருமாள் (K.P)**

# தன் சொந்த நிலத்தை மக்களுக்கு வழங்கிய மாண்புமிகு அமைச்சர் மஸ்தான்!





தமிழக அமைச்சரவையில் வெளிநாடுவாழ் தமிழர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக இருப்பவர் செஞ்சி மஸ்தான். கால் நூற்றாண்டு காலம் செஞ்சி பேரூராட்சி தலைவராக இருந்த இவர், 2 முறை சட்டமன்றத் தேர்தலில் வென்று இப்போது அமைச்சராக இருக்கிறார். இந்நிலையில் தேர்தலுக்கு முன்பு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற நிகழ்ச்சியில் இலவச வீட்டு மனை பட்டா கேட்டு மலைவாழ் மக்கள் ஸ்டாலினிடம் மனு அளித்திருந்தனர்.

அந்த மனுவை பரிசீலித்த விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுக்கும் பணிகளை தொடங்கியிருக்கிறார். ஆனால் அங்கு அரசு நிலமோ, புறம்போக்கு நிலமோ இல்லை என்பதால், இது தொடர்பான தகவலை அமைச்சர் செஞ்சி மஸ்தானின் கவனத்துக்கு அவர் கொண்டு சென்றிருக்கிறார். இதையடுத்து சிறிதும் யோசிக்காமல் எனது சொத்தை தருகிறேன் அவர்களுக்கு பிரித்துக் கொடுங்கள் எனக் கூறி மாவட்ட நிர்வாகத்தை திகைக்க வைத்திருக்கிறார் அமைச்சர் மஸ்தான்.




மேலும், முதலமைச்சரிடம் எந்த நம்பிக்கையோடு மலைவாழ் மக்கள் மனு கொடுத்தார்களோ, அந்த நம்பிக்கை இம்மியளவு கூட பிசகக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த அமைச்சர் மஸ்தான், தனது சொத்தை மலைவாழ் மக்களுக்கு உடனடியாக எழுதிக் கொடுக்க முன் வந்தார். அமைச்சர் மஸ்தானின் இந்த நடவடிக்கைக்கு அவரது குடும்பத்தினர் பக்கபலமாக நின்று ஆதரவு வழங்கியதுடன், செஞ்ச வட்டாட்சியர் அலுவலகத்துக்கு சென்று அமைச்சரின் மனைவி சைதானி பீவி, மூத்த மகள் ஆகியோர் முறைப்படி கையெழுத்திட்டு கொடுத்து அரசுக்கு சொத்தை வழங்கினர்.

அமைச்சர் மஸ்தான் அரசுக்கு தானமாக வழங்கிய 66 செண்ட் நிலத்தின் மதிப்பு ரூ.60 லட்சம் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் இப்படியொரு அமைச்சரா என அரசியலை கடந்து பொதுமக்கள் மத்தியிலும் அமைச்சர் மஸ்தானுக்கு பாராட்டுகள் குவிகின்றன. இதனிடையே அமைச்சர் மஸ்தானின் இந்த மனிதநேய செயலை அறிந்த முதலமைச்சர் ஸ்டாலின் அவரை பாராட்டியிருக்கிறார். செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு குடும்பத்துடன் சென்ற அமைச்சர் மஸ்தான், முறைப்படி பத்திரப்பதிவு நடைமுறையை பின்பற்றி நிலத்தை அரசுக்கு மாற்றிக்கொடுத்தார்.

**- ஆர்.குணசேகரன்**

# படைப்பாளி வீட்டின் எளிய திருமணம்!









மன்னார்குடியை சேர்ந்தவர் பாண்டியன். பாண்டியன் சுந்தரம் என்ற பெயரில் முகநூலில் இவர் பிரபலம். முகநூலில் தேவையற்ற பதிவுகள் வரும் இந்த சூழலில் பலரும் பயன்படத்தக்க வகையில் துணுக்குகள், கட்டுரைகள், அரிய தகவல்கள், பெண்களில் சாதனை புரிந்தவர்கள் பற்றிய கட்டுரைகள் என ஒரு இதழை நடத்துபவர்கள் எப்படி செய்தியை தருவார்களோ அதேபோல் தருவார். இவரிடம் தொடர்பு கொண்டபோது சிறுவயதில் "மல்லிகை "என்ற கையெழுத்து மூன்று ஆண்டுகள் இதழ் நடத்தினேன். நர்மதா, பத்மா மாத இதழ்களும் கருக்கல் விடியும் என்ற இலக்கிய இதழும் நடத்தியுள்ளேன். சிறுகதை கவிதை கட்டுரை என ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அப்போது இருந்த முன்னணி இதழ்களான விகடன் கல்கி ராணி சாவி உட்பட பல இதழ்களில் எழுதி கொண்டிருக்கிறேன். கலை, இலக்கிய ஆர்வலர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்கிறேன்." என்று தன்னைப் பற்றி சுருக்கமாக சொல்லி முடித்தார்.



சமீபத்தில் தன் மகளின் காதல் திருமணத்தை தன் வீட்டிலேயே 7 பேரை வைத்து நடத்தி முடித்திருக்கிறார்.

இதுபற்றி பாண்டியன் அவர்கள் நம்மிடையே பகிர்ந்து கொண்ட தகவல்

“எனக்கு 2 மகன்கள் ஒரு பெண். எங்கள் வீட்டில் நடைபெற்ற மூன்று திருமணங்களிலும் நாங்கள் வரதட்சணை கொடுத்ததும் இல்லை வாங்கியதும் இல்லை. அந்தவகையில் மகன் மணிகண்டன் - ஜெஸ்ஸி, மகன் வினோத் -ஆர்த்தி, மகள் பத்மா - விமல்ராஜ் என இணையர்கள் உள்ளனர்.

கடந்த வாரம் எங்கள் மகள் பத்மா - விமல் ராஜ் திருமணம் என் வீட்டில் நான் திருமண உறுதி மொழி வாசிக்க அதை மணமக்கள் திருப்பி வாசிக்க மாலையை மாற்றிக்கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரை மருமகள்கள் இன்னொரு மகள்களே மருமகன் இன்னொரு மகன் என்று நானும் எனது மனைவி அனுசூயாவும் மகிழ்ச்சியோடு வாழ்கிறோம்.

வாய்ப்பு வசதி இருந்தும் எளிமையாய் வாழும் இவர்கள் சமுதாயத்தில் எடுத்துக்காட்டு குறிப்பாக படைப்பாளி தன் படைப்பின் சொல்வதைப் போலவே நடந்து கொள்வது சிறப்பான ஒன்று.

- தம்பி முருகானந்தம்



# How to keep your child Away from mobile

If you want to learn how to keep the children away from the mobile phones or other digital devices, follow the steps below.

Encourage Outdoor Activities The best way to keep your kids away from mobile is by encouraging them to do outdoor activities such as gardening, watering plants, walks with pets, visit parks, and so on.

A child gets bored when he/she continuously stays inside the house and demands the phone to have fun. When you engage them in outdoor activities, they get distracted and forget about mobile.

Children have forgotten how to enjoy themselves these days. They often become busy with a cellphone, and they become anti-social, which might affect their mental and physical health.

When you introduce your child to the cell phone earlier, they might become addicted to it and not concentrate on any other things.

A child should not be introduced to a mobile phone until he/she knows about using mobile and reaches the appropriate age of using a digital platform. Parents should not expose their child to social media accounts until he/she gets two years, except in video calls.

You can teach your child using a mobile phone and watching an appropriate video together to make them understand the content. You can help your child understand what is on the screen by watching the video and knowing the content you want to teach them.

Some parents offer their child mobile phones to calm and introduce them as entertainment when they get bored and do not give time to look after their child.

It makes children addicted to the phone as they learn to use everything and get active everywhere from an earlier age. This addiction can be harmful to children, so introducing phones earlier is not adequate for children if they want to keep them away from mobile.

If you involve your kids in creative activities, they might get distracted, making them stay away from mobile. You can give them various tasks that help build up their mind, and it is essential for the child's healthier growth.

The mobile phone makes children mentally weak and results in poor performance. Parents should make their child involved in creativity like painting, swimming, drawing, gardening, creating stories, reading storybooks and essays, and

playing different indoor and outdoor games without introducing mobile in the beginning.

Also, for the healthier growth of children, they must create, explore, learn, play, imagine, and innovate new ideas in their minds. Their mind should be free of stress and any other distractions from mobile.

So you must leave them alone and keep them free from any kind of distraction. Offering your kid a smartphone is one of the main factors which distracts their mind and makes them dull and inactive. It results in low performance, and they do not obey you when they become addicted to mobile.

They always get engaged in social media and play online games that might make them anti-social,



and their creativity gets lost.

The more time children spend with their parents, the more they develop communication skills and gain more knowledge. Parents are the first teacher of every kid.

Raising a child depends upon the parent's hand, so parents should play every role for their kids. They need to be children's best friends, guardians, leaders, teachers and guide their children by spending quality time with them.

Parenting becomes productive when you can spend quality time with your children. You can play indoor and outdoor games with your child, make them visit the garden or park, take them to party during weekends, and communicate openly.



When you interact with kids, you can know about their interests and desires, and you can also be their best friends. Children learn from others' activities, so when you spend time with them, they can develop good communication skills and become polite and responsible. Take Them to a Party or Organize a Party During the Weekend. You can try something new with your kids to see good results in parenting. Children get to learn many things when they visit different places and interact with other people.

You must pay attention to your child as they continually seek attention and want their parents to communicate with them. So it is your responsibility to commit yourself to have a fun family during day or night.

You can organize fun events in the family to keep your child distracted so they do not remember using mobile. You can gather their friends in the house and make them play indoor games, cook food, etc., and allow them to entertain themselves.

They can arrange to cook their favorite foods, bake a cake, make them visit their friend's house, socialize with neighbors and relatives, take them to parties every weekend, and so on.

You can also encourage your kids to participate in sport, drawing, painting, reading books, etc., which helps keep them productive. These activities make them busy, and they do not remember to use mobile. You can also teach them and tell stories during bedtime to not quarrel with using mobile phones.

**- R.Haribabu**

# பானி பூரி விற்பவனை மட்டும் வைத்து எடை போடாதீர்கள்!

## வடமாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் வளர்ந்தது எப்படி?

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய அமைச்சர் பொன்முடி அவர்கள், இந்தி படிச்சவங்க இங்கவந்து பானிபூரிதான் விற்கறாங்க எனச்சொல்லி இந்தியை திணிக்கும் ஒன்றிய அரசுக்கும், இந்திக்காக வக்காலத்து வாங்கும் கவர்னர் ரவிக்கும் பதிலடி தந்துள்ளார். நிகழ்ச்சி மேடையிலேயே பதிலடி தந்ததை வரவேற்போம், அதேநேரத்தில் அவன் இங்குவந்து பானிபூரி விற்கிறான் என்பது உண்மைதான். அப்படி சொல்லியே நாம் நம்மை ஏமாற்றிக்கொண்டு இருக்கிறோம்.

தமிழக களநிலவரம் வேறு.

வடமாநிலங்களில் இருந்து வேலைக்காக தமிழகம் வந்து வேலை செய்தவர்கள் இன்று நம்மக்களுக்கு வேலை தரும் அளவுக்கு உயர்ந்துவிட்டார்கள் என்பதே களநிலவரம். அதற்கு காரணம் நம்மை சுற்றியுள்ள வர்த்தகர்கள், வியாபாரிகள், அரசியல்வாதிகள் என பலருக்கும் தொடர்பு உண்டு.

நம்மாளு சரியா வேலைக்கு வர்றமாட்டேன்கிறான், கூலி அதிகமாக கேட்கறான், லா பேசறான் அதெல்லாம் பேசாமல் சொல்ற வேலையை செய்துட்டு போறான், மாடு மாதிரி உழைக்கறான் எனச்சொல்லி வடஇந்தியர்களை ஆதரித்ததன் விளைவு இன்று சேலத்தில் தெருவில் இட்லி சுட்டு விற்கும் அளவுக்கு இறங்கிவிட்டார்கள் வடமாநிலத்தவர்கள். நாமயென்னவோ அவன் இங்குவந்து பானிபூரி வித்துக்கிட்டு இருக்கான் என பேசிக்கொண்டு இருக்கிறோம்.

முகநூலில் உள்ள தோழர்கள் உங்கள் நகரத்தை சுற்றிவாருங்கள் அல்லது உங்கள் ஊர் வர்த்தகர்களிடம் பேசிப்பாருங்கள். கடந்த பத்தாண்டுகளில் வடமாநிலத்தவர்கள் எவ்வளவு பேர் அந்த நகரத்தில் தொழில் தொடங்கியுள்ளார்கள் எனக்கேளுங்கள் விபரீதம் புரியும். அவன் உழைக்கிறான், சம்பாதிக்கறான், தொழில் தொடங்குகிறான் என இதை கடந்துவிட முடியாது. குறைவான கூலி வாங்கும் ஒருவனால் நகரத்தின் மையத்தில் எப்படி சுலபமாக ஒருஇடத்தை மார்க்கெட் வேல்யூவை விட இரண்டு மடங்குபணம் லட்சங்களில் அட்வான்ஸ் தந்து பிடிக்க முடிகிறது? தொழில் தொடங்க முடிகிறது?.

வேலூரை எடுத்துக்கொள்வோம். 10 ஆயிரம்



வர்த்தகர்கள் உள்ளார்கள் என்றால் அதில் 4 ஆயிரம் வர்த்தகர்கள் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள். இவர்களுக்கான நிதி தேவை எவ்வளவு கோடிகளில் கேட்டாலும் சுலபமாக கிடைக்கிறது. வடஇந்தியாவில் இருந்து தென்னிந்தியாவிற்கு வந்து தொழில் தொடங்குபவர்களுக்கு நிதிதருவதற்கான சங்கம், அமைப்புகள் ஒவ்வொரு ஊரிலும் உள்ளன. மிகமிக குறைந்த வட்டி அதாவது அரை பைசாவுக்கும் கீழே எந்தவித ஆவண உத்தரவாதமும் இல்லாமல் கிடைக்கிறது.

நீங்களோ, நானோ ஒரு வியாபாரத்தை தொடங்குகிறோம் என்றால் அப்படி நிதியுதவி தர எந்த அமைப்பாவது உள்ளதா? நம்ம சாதிக்காரன் எனச்சொல்லுபவர்கள் தங்கள் சாதிக்காரனுக்கு தருகிறார்களா? என்றால் 200 சதவிதம் இல்லை.

தமிழ்நாட்டில் மொத்த வியாபாரம் என்பது இஸ்லாமியர்களிடம்மிருந்து வடமாநிலத்தவர்களின் கைகளுக்கு வந்துவிட்டது. அவர்களிடம்மிருந்தே தமிழக

சிறுகுறு வர்த்தகர்கள் பொருட்கள் வாங்கி வியாபாரம் செய்கிறார்கள்.

சிறுகுறு வியாபாரத்தில் இருந்தும் தமிழக வியாபாரிகளை ஒழிக்க அவர்கள் ஒரு விஷயத்தை கையாள்கின்றனர். அதாவது மொத்த வியாபாரிகளான வடஇந்திய வர்த்தகர்கள், ஒருபொருளை தமிழக வர்த்தகராக இருந்தால் 70 ரூபாய்க்கும், தன்மாநிலத்தை சேர்ந்தவராக இருந்தால் அதேபொருளை 50 ரூபாய்க்கும் தருகிறார்கள். அந்த பொருளை விற்பதன் மூலமாக தமிழக வியாபாரிக்கு 30 ரூபாய் லாபம் கிடைத்தால், வடமாநில வியாபாரிக்கு 50 ரூபாய் லாபம் கிடைக்கிறது. பலநேரங்களில் 10 ரூபாய் குறைத்து 90 ரூபாய்க்கும் விற்கிறான் வடமாநில வியாபாரி. நாம் என்ன செய்வோம் பொருளை விலை விசாரித்து 90 ரூபாய் விற்கும் இடத்திலேயே வாங்குவோம். இந்த வடமாநில



வர்த்தகர்களுக்கு தமிழகத்தில் பாதுகாப்பே பாஜகவும், பல பெயர்களில் புகுந்துள்ள இந்துத்துவா அமைப்புகள்தான். வர்த்தகத்தில் உள்ள இஸ்லாமியர்களை விரட்ட கைகோர்ப்போம், உங்கள் ஆட்களால் முடியாது, இவனும் இந்துதான் எனச்சொல்லி வடஇந்திய வர்த்தகர்களுக்கு தொழில் தொடங்க பக்கபலமாக இருங்கள், கட்சி நடத்த நிதிதருவார்கள் அதைவைத்து செலவு செய்யுங்கள் எனச்சொல்லி மூளையற்ற தமிழக சங்கிகளுக்கு கட்சியில் பதவி தந்து வடஇந்திய வர்த்தகர்களுக்கு அடியாள் வேலை செய்யவைக்கின்றன. அவன் இஸ்லாமியர்கள் நடத்தும் வியாபாரத்தை மட்டும் காலி செய்யவில்லை. இந்துக்கள் எனச்சொல்லப்படுபவர்களின் வியாபாரத்தையும் சேர்த்துதான் காலி செய்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இஸ்லாமியன் மொத்த வியாபாரியாக இருந்தால் நம்மவூர் செட்டியார், முதலியார், நாயுடு சாதியினர் அதிகளவில் சிறுகுறு வர்த்தகத்தில் ஈடுபடுகிறார்கள். பஜாரில் வியாபாரம் செய்யும் முதலியாருக்கு செட்டியார் வளர்ந்துவிடக்கூடாது, செட்டியாருக்கு நாயுடு வளர்ந்துவிடக்கூடாது, நாயுடுகளுக்கு வன்னியர்கள் வளர்ந்துவிடக்கூடாது, வன்னியர்களுக்கு தலித் வளர்ந்துவிடக்கூடாது, தலித்களுக்கு அருந்ததியர் வளர்ந்துவிடக்கூடாது என குழிவெட்டுவதால் வடஇந்திய வர்த்தகர்களோடு போட்டிப்போட முடியாமல் இவர்களின் வர்த்தகம் நசுங்கிக்கொண்டு போகிறது.

நம்மாளுங்க நான் ஃபில் போட்டு சரியா வியாபாரம் செய்யறான், ஜீ.எஸ்.டி சரியா கட்டறான் என நம்மிடம் பணத்தை பிடுங்குவார்கள். மார்வாடிகள் நம்மிடம் நூறு ரூபாய் முதல் கோடிகளில் வியாபாரம் செய்தாலும் ஃபில் வேண்டாம் என்றால் பில் போடமாட்டார்கள். நகை கடைகளில் மட்டும்மல்ல பிளாஸ்டிக் பொருட்கள், அழகுசாதன பொருட்கள் மொத்தமாக விற்பனை செய்யும் வடஇந்தியர்கள் ஃபில் போடுவதேயில்லை. வருமானவரித்துறையோ, வணிக வரித்துறை எதுவும் இவர்களை கண்டுக்கொள்வதில்லை. சிலநேரங்களில் சிக்கினாலும் இவர்களை காப்பாற்ற வணிகவரித்துறை, வருமானவரித்துறையில் வடஇந்திய அதிகாரி அமர்ந்துக்கொண்டு எல்லா உதவிகளையும் செய்து காப்பாற்கிறார். அதே அலுவலகத்தில் நம்மாட்கள் யாராவது இருந்து போய் நம்மாட்கள் உதவியெனக்கேட்டால், நீங்க நம்மாளா (சாதி) என்பதே அவர்களின் முதல் கேள்வி. அடுத்ததாக என் வேலை போய்டுங்க என பம்முகிறார்கள். வடஇந்திய அதிகாரிகள் அதுப்பற்றியெல்லாம் கவலைப்படுவதேயில்லை.

கோவையில் பாஜக வானதிசீனுவாசன் வெற்றி பெறக்காரணம் என்னவென பூத்வாரியாக வாக்கு சதவிதத்தை எடுத்துப்பாருங்கள், எந்தளவுக்கு வடமாநில மக்கள் இங்கு வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் கார்டு வாங்கியுள்ளார்கள் என்பது தெரியும். இதுயெல்லாம் வாங்க நீங்களோ, நானோ தாலுக்கா அலுவலத்துக்கும் வீட்டுக்கும் அலையவேண்டியுள்ளது. அவர்களுக்கு அது சுலபமாக கிடைக்கிறது. அரசாங்கம் அவர்களுக்கு சாதகமாக இருக்கிறதா என்றால் இல்லை. பணம் தந்தால் பல்லைக்காட்டும் அரசு ஊழியர்கள் நிறைந்துயிருப்பதால் இதுசாத்தியமாகிறது.

தமிழர்களின் வியாபாரத்தை காலி செய்யும் வடஇந்தியர்கள் அரசியலுக்குள் தங்களுக்கு வேண்டியவரை வெற்றி பெற வைக்கும் அளவுக்கு சிறிய சிறிய ஊர்களிலும் வளர துவங்கியுள்ளார்கள் என்பதே நிதர்சனம்.

இந்தி படிச்சிட்டு வந்து நம்மவூர்ல பானிபூரி விக்கறான், கூர்க்கா வேலை செய்யறான், ஹோட்டல்ல சப்பாத்தி சுடுகிறான் என ஏமாற்றிக்கொள்வதை விட்டுவிட்டு இதிலிருந்து மீள்வது எப்படியென யோசியுங்கள். இல்லையேல் அவன் பானிபூரி பேக்டரியில் நீங்கள் மாவு பிசையும் வேலையை செய்ய வேண்டியதாகிவிடும்.

**- டாக்டர்.ஆ.தமிழ்மாறன் எம்.ஏ.எம்.பில்.,**

# பத்திரிகையாளரை அவமதிக்கும் அண்ணாமலை!

– பதிலடி கொடுக்கும் ஊடகவியலாளர்

**B.R. அரவிந்தாக்ஷன்**





மதிப்பிற்குரிய தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அவர்களுக்கு...

கடந்த முறை உங்களுக்கு எழுதிய கடிதத்தில், உங்களது வாலைப்பிடித்துக்கொண்டிருக்கும் பத்திரிகையாளர்கள் நீங்கள் ரத்தம் வருமளவு கடித்தாலும் கூட வெட்கமே இல்லாமல் திரும்பத்திரும்ப வருவார்கள் என்று கூறியிருந்தேன்.

உங்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். நான் சொன்னது அப்படியே நடக்கிறது பார்த்தீர்களா? 2020ம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் தேதி தான் அரசியலில் உங்களை நீங்கள் இணைத்துக்கொண்டீர்கள். அரசியலுக்கு நீங்கள் வந்து 19 மாதங்கள் 10 தினங்கள் ஆகிறது.

கர்நாடகாவில் பணியாற்றியபோது பிஜேபியின் கால்களை கழுவி சேவகம் செய்தது, RSS நிர்வாகிகளை காக்கா பிடித்ததன் பலனாக தமிழக பிஜேபி தலைவராக,இப்போது பதவியில் இருக்கிறீர்கள்.

வேறு நீங்கள் என்ன செய்து கிழித்துவிட்டீர்கள் தமிழக பிஜேபிக்காக..

நாட்டை ஆளும் கட்சியின் மாநிலத்தலைவரான நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்கு தெரிகிறதா அண்ணாமலை அவர்களே?

தமிழக பாஜக தலைவராக இருந்த தமிழிசை சௌந்தர்ராஜன் என்ற அற்புதமான மனுஷி உருவாக்கி வைத்திருந்திருந்த உறவுப்பாலத்தை வெடிவைத்து தகர்த்து வருகிறீர்கள்...

27.05.22 ம் தேதி நடந்த உங்களுடைய பத்திரிகையாளர்கள் சந்திப்பில் நீங்கள் பேசியது சரியென்று உங்களுக்கு தோன்றுகிறதா?

ரூ.200, ரூ.400 வாங்கிக்கொள் என்று தொகையை ஏற்றிக்கொண்டே செல்கிறீர்கள். ஏலம் விடுகிறீர்கள்.வெளிப்படையாக ஏளனம் செய்கிறீர்கள்.

பிரதமரின் வருகையின் போது அனுமதியோடு தான் பேனர் வைக்கப்பட்டதா என்று கேட்பது,பிஜேபி கட்சிக்கு எதிரான அவதூறா ஐயா?

சென்னை மாநகராட்சி பேனர் வைப்பதற்கு எந்த அனுமதியும் வழங்குவதில்லை. அப்படி இருக்க நீங்கள் யாரிடம் அனுமதி வாங்கினீர்கள் ?

சென்னையில் எந்த அளவில் பேனர் வைக்க அனுமதி வழங்கப்படுகிறது என்றாவது தெரியுமா உங்களுக்கு ?

தற்காலிகமாக பேனர் வைத்தால்கூட , அரசுக்கு தலா 50 ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும். அரசின் அனுமதியே இல்லாதபோது,பேனர் வைத்ததற்கான கட்டணத்தை எந்த துறைக்கு செலுத்தினீர்கள் மிஸ்டர் ?

மிக எளிமையாக கடந்து செல்லவேண்டிய ஒரு கேள்விக்கு உங்களுக்கு ஏன் அவ்வளவு கோபம் வருகிறது.. அண்ணாமலை..?

அத்தோடு,கேள்வி கேட்ட தம்பியிடம் அறிவாலயத்தில் இருந்து பணம் வந்துவிடும் என்று அடிக்கடி நக்கலாக கூறுகிறீர்களே ..

அறிவாலயத்திடம் இருந்து எப்போது, யார் அப்படி பணம் வாங்கும் போது விளக்கு பிடித்து பார்த்தீர்கள் அண்ணாமலை...?

சூடு,சொரணை,வெட்கம்,மானம் எதுவுமே இல்லாமல் உங்களது செய்தியாளர் சந்திப்புக்கு வரும் பத்திரிகையாளர்கள் உங்களிடமோ அல்லது உங்கள் கட்சி நிர்வாகிகளிடமோ வாயைத்திறந்து, யார் பணம் கேட்டார்கள் என்று உங்களுக்கு உண்மையிலேயே ஆண்மை இருந்தால் கூறமுடியுமா ?

30 ஆண்டு சர்வீஸ் இருந்தும் அரசுப்பணியை ராஜினாமா செய்துவிட்டு பிஜேபி மாநிலத் தலைவர் என்ற பதவியோடு பந்தாவாக காரிலும் விமானத்திலும் நீங்கள் பறந்து கொண்டிருக்கிறீர்களே அதற்கு உங்கள் கட்சி



தானே செலவு செய்கிறது ? அந்த பணம் யாருடைய பணம் சார் ?

பெரிய பெரிய தொழில் நிறுவனங்களிடம் நன்கொடை என்ற பெயரில் பிச்சை எடுத்த பணம் தானே ?

இப்படி ஊரெல்லாம் பிச்சை எடுத்த காசில் ஊரை சுற்றி வரும் நீங்கள் தொழில் தர்மம் குறித்து பேசுகிறீர்கள்?

உண்ணும் உணவு உடம்பில் ஒட்டவேண்டும் என்றெல்லாம் பாடம் எடுக்கிறீர்கள்..

அதாவது உங்கள் கட்சி குறித்து அவதூறு செய்தால் நீங்கள் திருப்பி அடிப்பேன்.அதுவே என் தர்மம் என்கிறீர்கள். அவ்வளவு பெரிய யோக்கிய சிகாமணியா அண்ணாமலை நீங்கள் ?

அப்படி என்றால் கடந்த ஆண்டு குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் எதற்காக விலைமதிப்புள்ள செல்போன் வாங்கி கொடுத்தீர்கள் அண்ணமலை ?

நீங்கள் கொடுத்த செல்போனை எல்லோருமே வாங்கிக்கொண்டார்களா என்ன ?

அதாவது... உங்களை அவதூறு செய்தால் திருப்பி அடிப்பது உங்களுக்கு தர்மம் என்றால், பத்திரிகை துறையை சேர்ந்தவர்களை நீங்கள் அவமானப்படுத்தினால் அதற்கு உரிய பதிலை கொடுப்பது, அதே துறையைச் எனக்கும் தர்மம் தானே ?

உங்களது சமீபத்திய செய்தியாளர் சந்திப்பில் உங்களை நோக்கி கேள்வி எழுப்பியவர் பிரபல தொலைக்காட்சியின் இளம் செய்தியாளர்.

அறிவாலயத்திடம் இருந்து பணம் வாங்கிக்கொள் என்று அவமானப்படுத்திய பிறகு,நீங்கள் அதோடு நின்றீர்களா என்ன ?இல்லை..வெளிநாட்டில் இருக்கும் அந்த தொலைக்காட்சியின் உரிமையாளருக்கு தொலைபேசியில் அழைத்து புகார் வேறு செய்திருக்கிறீர்கள்.

உங்கள் யோக்கியதை என்னவென்று உங்களுக்கு தெரிகிறதா?

ஆங்கில நாளிதழ் செய்தியாளரையும் சமீபத்தில் ஏகவசனத்தில் பேசியிருக்கிறீர்கள்.

வீட்டில் இருக்கும் நபர்கள் பற்றியெல்லாம் கூட பேசி வரம்பு மீறி இருக்கிறீர்கள்..

நீங்கள் கூறுவது போல பணம் வாங்கிக்கொண்டு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டு கோடீஸ்வரனாக மாறிய ஒரே ஒரு பத்திரிகையாளரை தமிழகத்தில் உங்களால் காட்ட முடியுமா அண்ணாமலை அவர்களே ?




பஞ்சப்பராரிகளைப்போல,, பத்திரிகையாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள் மிஸ்டர்.

அதனால் தான் அவர்களுக்கு நலவாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், "அண்ணா.. அண்ணா.." என் பேரை கொஞ்சம் போடுங்க,என்னையும் சேர்த்து படம் பிடிங்கன்னு பத்திரிகையாளர்களை கெஞ்சி கோடீஸ்வரன் ஆன அரசியல்வாதிகளை நான் காட்டவாஞ்?

2014க்கு முன்பு வரை தமிழக பிஜேபியின் நிலை என்னவென்று உங்களுக்கு தெரியுமா ?

50 சேர் போட்டு ஒரு தெருக்கூட்டம் கூட்டம் போடுவதற்கு கூட தடுமாறுவார்கள்.

கட்சி முக்கிய நிர்வாகிகளின் வெளியூர் பயணச்செலவுகளுக்கு கூட கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு, அதிமுக அரசுக்கு ஏற்பட்ட அச்சத்தின் விளைவாக, தமிழக பிஜேபியின் வசதி அதிகரிக்கத்தொடங்கியது.அதிமுக ஆட்சிக்காலத்தில் அமைச்சர்களாக இருந்தவர்களிடம் பணமே வாங்கவில்லை என்று உங்கள் கட்சி நிர்வாகிகளை கூறச்சொல்லுங்களேன் பார்க்கலாம்..

இப்படி ஊரெல்லாம் காசை பிச்சையெடுத்து கட்சி நடத்தும் நீங்கள் தான்..

பத்திரிகை துறையை சேர்ந்தவர்களை அறிவாலயத்தில் பணம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று இழிவாக பேசுகிறீர்கள்.

அதாவது, உங்களது செய்தியாளர் சந்திப்புக்கு வந்து கேள்வி கேட்டால் அறிவாலயத்தில் பணம் கொடுப்பார்கள். அப்படித்தானே!?

தமிழ்நாட்டின் வரலாற்றில் அதிமுக,திமுக மற்றும் எந்த கட்சியின் அரசியல் தலைவரும் இன்னொரு கட்சியிடம் பணம் வாங்கிக்கொண்டு எங்களுக்கு எதிராக எழுதுகிறீர்கள் என்று ஒரு நாளும் பத்திரிகையாளர்களை நோக்கி பேசியதில்லை.

அவ்வளவு ஏன்,,உங்களுக்கு முன்பு தமிழக பிஜேபி தலைவர்களாக இருந்த ஒரே ஒரு நபர் கூட பேசியதில்லை.

நீங்கள் மட்டுமே இந்த தரங்கெட்ட வேலையை செய்து வருகிறீர்கள்.

கமலாலயத்திற்கு செய்தியாளர்கள் வருவது "அண்ணாமலை" என்ற உங்களுக்காக அல்ல.

பிஜேபி என்ற கட்சிக்காக...

உங்களது இடத்தில் ஒரு கழுதையை அமரவைத்தாலும் வருவார்கள்..

ஏனென்றால், அது அந்த கட்சிக்கு கொடுக்கும் மரியாதை இன்று பிஜேபியின் மாநிலத் தலைவர் என்ற ஆணவத்திலும் அகம்பாவத்திலும் வாய்ச்சவடால் அடித்துக்கொண்டிருக்கிறீர்கள் அல்லவா ?

உங்கள் பொது வாழ்க்கைக்கான விதை போட்டது அந்த பத்திரிகைக்காரன் கொடுத்த டைட்டில் என்பதை மறந்துவிடாதீர்கள்.

அதற்காக, விமர்சனத்திற்கோ,கேள்விகளுக்கோ அப்பாற்பட்டவர்கள் செய்தியாளர்கள் என்று நான் கூறவில்லை.

சரியான முறையில் நாகரீகமாக பேசுங்கள்..

தவறாக,அவதூறாக செய்தி வெளியிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுங்கள். எருமை மேய்ப்பதற்கா வழக்கறிஞர் பிரிவை வைத்துள்ளீர்கள் ?

அப்புறம், அரசியல்வாதிகள் பத்திரிகையாளர்களுக்கு கொடுக்கும் சில நூறு ரூபாய்கள் பிச்சையல்ல ப்ரதர். அது துறவியின் பாத்திரத்தில் வைக்கப்படும் காணிக்கைக்கு சமமானது. ஏனெனில் உங்களைப்போன்ற அரசியல்வாதிகள் செய்யும் எந்தவிதமான அயோக்கியத்தனத்தையும் பத்திரிகையாளர்கள் செய்வதில்லை.அநியாயமாக பணத்தையும் சம்பாதிப்பதில்லை.

அரசு ஊழியர்களைப்போல லட்சக்கணக்கில் லஞ்சம் வாங்கி கோடிக்கணக்கில் சொத்து சேர்ப்பதில்லை.

மன்னர் கால புலவர்களைப்போல பரதேசிகளாகவே வாழ்ந்து மடிகின்றனர்.

தொகுப்பு:
மூத்த பத்திரிகையாளர் **ராபின் டேனியல்**

# இலங்கையின் இன்றைய நிலைமை! ஆட்சியாளர்களுக்கு ஒரு எச்சரிக்கை மணி!



இலங்கையில் ஆட்சியாளர்கள், தன் நாட்டில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அனைத்து துறைகளிலும் அந்நிய நாட்டிற்கு வழி விட்டதால் பொருளாதார சுரண்டல் நடந்தது. அன்னிய நாட்டு முதலாளிகளால், இலங்கை வேளாண் மக்களின் விளைநிலங்கள் பிடுங்கப்பட்டு பன்னாட்டு முதலாளிகளுக்கு சென்றது. அந்த நிலங்களில் வேளாண்மை நடைபெறாமல் மற்ற தொழில்களை அங்கு ஆரம்பித்தனர் பன்னாட்டு முதலாளிகள்.

இலங்கை ஆட்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தின் மீது கவனம் செலுத்தாமல் சுய தம்பட்டம்,விளம்பரம் செய்துகொண்டு சொகுசாக வாழ ஆரம்பித்தனர். மதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.



ஆலைகளில் கவனம் செலுத்தாமல் ஆலயங்களில் கவனம் செலுத்தினார்கள். நாட்டுமக்கள் கஷ்டப்படும்போது இலங்கை ஆட்சியாளர் பல கோடி ரூபாய் செலவில் தனக்கென விமானங்கள் வாங்குவதும், சொகுசு வீடுகளும் கட்டுவதும், சொகுசாக வாழ்வதுமா க இருந்தார்கள்.

இலங்கை முழுவதும் நிர்வாகம் அன்னிய நாட்டு சக்திகளின் கையில் சென்று விட்டது. அந்நிய முதலாளிகள் முடிந்தவரை இலங்கை பொருளாதாரத்தை சுரண்டி விட்டு பிரச்சனை வந்ததும் நாட்டை விட்டு வெளியேறி விட்டார்கள்.

இலங்கை ஆட்சியாளர்கள், இலங்கை மக்களை பெரும்பான்மை சிங்களவர்கள், சிறுபான்மை முஸ்லிம்கள், கிருத்துவர்கள், தமிழர்கள் என பாகுபடுத்தி, மக்களிடையே பிளவை ஏற்படுத்தி சிறுபான்மையினரை அழிக்கும் செயலில்இறங்கினர்.

தமிழர்கள் வாழும் பகுதியில் சிங்கள தீவிரவாதிகளை குடி அமர்த்தினர். மக்கள் நல சட்டங்கள், தொழிலாளர் நல சட்டங்கள் நீக்கப்பட்டு பெரும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவாக ஆட்சியாளர்கள் செயல்பட்டனர்.

சிங்கள இனவாதம், சிங்கள மொழி வாதம், பேசிக்கொண்டும், இருந்தார்கள்.

ஆட்சியாளர்கள் சிறந்த நிர்வாகத்தை கொடுக்க, அறிவுப்பூர்வமான அதிகாரிகளை பக்கத்தில் வைத்து கொள்ளாமல், ஜோசியர்களையும், மத குருமார்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் கூறியபடி



ஆட்சி நடத்தினார்கள். இதனால் ஜோசியர்களும், மதகுருமார்களும் செழித்தார்களே தவிர, மக்கள் வறுமைக்கு தள்ளப்பட்டார்கள், இலங்கை ஆட்சியாளர்களின் தவறான கொள்கையினால் நாட்டில் பெரும் பொருளாதார பிரச்சனை ஏற்பட்டு மக்கள் வாழ்நிலைபாதிக்கப்பட்டுவிட்டது.

மதத்தை வைத்து ஆட்சி நடத்திய இலங்கை ஆட்சியாளர்களை புரிந்து கொண்ட அனைத்து மக்களும் இன்று ஓரணியில் திரண்டு ஆட்சியாளருக்கு எதிராக இன்று வீதியில் நின்று போராடுகின்றார்கள். இலங்கை பொருளாதாரத்தை சுரண்டி வெளியேறிய அந்த அன்னிய நாடுகள் இன்று இலங்கைக்கு உதவ முன்வரவில்லை. இந்த இக்கட்டான நேரத்தில் இந்தியா, இலங்கை மக்களை காக்க நேசக்கரம் நீட்டி உள்ளது. இலங்கையின் இன்றைய நிலை, அனைத்து நாடுகளுக்கும் படிப்பினை.....? எச்சரிக்கை....?

இலங்கை மக்கள் படும் கஷ்டத்தை படித்துவிட்டு, தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு சுலபமாக கடந்து சென்று விடுகிறோம். சிலர் கிண்டலும் செய்கிறார்கள்.

இது அனைவருக்குமான எச்சரிக்கை என்பதை உணராமல்...

* ஆலைகளை மூடிவிட்டு ஆலயங்கள் திறந்தால் நாடு உருப்படாது!
* வேளாண்மை தான் அனைத்து உயிர்களையும் காக்கும்!
* ஒரு நாட்டில் விவசாயி மன நிம்மதியுடன் வாழ்ந்தால்தான் அந்த நாடு செழிப்புறும். மக்கள் அமைதியுடன் வாழ முடியும்!
* ஏனெனில் குடிக்க தண்ணீரும், உண்பதற்கு அரிசியும் கோதுமை தானே தேவை!
* பெட்ரோலை குடிக்கவோ, தங்கத்தை உண்ணவோ முடியாது!
* கொள்ளை நோயும், பொருளாதாரப் பின்னடைவும் ஒன்றே! இது அனைத்து நாடுகளையும் தாக்கும்!
* மக்களும், ஆட்சியாளர்களும் கவனமாக இருக்க வேண்டிய நேரம் இது! ஏனெனில் சாதி மதம் சோறு போடாது!
* சாதியும் மதமும் மனிதனுக்கு கேடு!
* அறிவு தான் அனைத்திற்கும் தீர்வு!

இலங்கை மக்கள் கஷ்டங்கள் நீங்கி, சகஜ வாழ்விற்கு வர அனைத்து நாடுகளும் அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும். நான் படித்ததில் பிடித்தது, உங்களுடன் பகிர்கின்றேன்.

**– சீர்காழி ராம்குமார்**

# "தபால் மூலம் கடலை மிட்டாய் விற்பனை"

கோவில்பட்டி கடலைமிட்டாய் விற்பனையையும் அஞ்சல்துறை மூலம் அனைத்து அஞ்சலகங்களில் தொடங்கப்பட்டுள்ளது. கோவில்பட்டி கடலை மிட்டாய் இனி அஞ்சலகங்கள் மூலம் வாடிக்கையாளர்களின் வீட்டு வாசலில் தபால்காரர் மூலம் சேர்க்கப்பட உள்ளது. இந்தியாவில் எந்த அஞ்சலகத்திலும் ரூ 390 கொடுத்து கடலை மிட்டாய் ஆர்டர் செய்தால், கோவில்பட்டி தலைமை அஞ்சலக இணையம் மூலம் பெறப்பட்டு, அடுத்த ஓரிரு நாட்களில் அவர்கள் வீட்டிற்கு விரைவு அஞ்சல் மூலம் கொண்டு சேர்க்கப்படும். விரைவு அஞ்சலுக்கு தனி கட்டணம் கிடையாது. ஒரு கிலோ எடையுள்ள கடலை மிட்டாய் பார்சலில் 5 கடலைமிட்டாய் பாக்கெட்டுகள் இருக்கும். வீட்டிலிருந்தபடியே தபால் காரர்கள் மூலம் ரூ 390 கட்டி ஆர்டர் செய்து கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**– கோவில்பட்டி முத்துலட்சுமி**





DELIGHTS
DELIGHTS
Live at the Center of Modern Conveniences & Entertainment.
Starts from 59 lakhs
KRM 99 DELIGHTS
FLAT INTERIOR FINISHES
LED Light Fittings- Panasonic/CM
32-Inch LED TV Sony/Croma
5-ton Hitachi Inverter AC
15-ltr Storage Haier Water Heater
King Size Cot
CCTV Security Cameras
Security Guards
Gate Security 24X7
Fire Safety Hooter
Booms Barriers
Speed Breakers
Surveillance Room
Fire Hydrant System
Fire Extinguishers
Toll Free +91 98842 95482
KRM Home Makers Pvt Ltd, Kolathur,Chennai, Tamil Nadu 600099

# ஆட்டு மந்தை



நான்கு வயது ஆண் குழந்தை சட்டை மட்டும் அணிந்து கையில் ஒரு தட்டை ஏந்தி பல்லில் கடித்துக் கொண்டு அழுதான்.பின்னால் அவன் அம்மா நாகம்மாளும் வந்தாள். இரண்டு கரும்பலகைகள் அதில் குழந்தைகளுக்காக கல்வி சார்ந்த வசனங்கள் முன்னால் ஒரு அறை பின்னால் இரண்டு அறை பழுதடைந்து இருக்க பத்து குழந்தைகள் உள்ளே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

தாமரைச் செல்வி டீச்சர் ஒரு பந்தினை எடுத்து டேய்...

செல்ல குட்டி கன்னு குட்டி. இங்கே பாரு.. பந்து குழந்தைகளோடு விளையாடிக் கொண்டு இருக்க நாகம்மாள் வந்தாள்.

டீச்சர்... டீச்சர்...

பால் பாண்டியை உள்ளே கூப்பிடுங்க...

தினம் இங்கு கூட்டு வந்து விடுங்க.

எங்க டீச்சர்.

நான் காடு கரைகளுக்கு போயி விடுவேன். என் வீட்டுக்காரும் வேலைக்கு போயிருவாரு. என்ன பண்ணுறது நேரம் எங்கே இருக்கு.

கோழி கூப்பிட எழுந்து காடுக்கு போன பொழுது சாய தான் வீட்டுக்கு வாரேன் காடு போன காடு வீட்டு வந்தா வீடு இப்படித்தான் பொழப்பு போகுது.

டேய்.... பாண்டி ஓடி வா...

தாமரைச் செல்வி டீச்சரை பார்த்துக் சிரித்துக் கொண்டே உள்ளே சென்று விட்டான்.

சுடு தண்ணீரை காய வைத்து மாவை (சத்துணவு மாவு) போட்டு பிசைந்தார்கள். கையில் உருண்டையாக திரட்டி குழந்தைகளுக்கு கொடுக்க தீபா டீச்சர் கரும்பலகையை நோக்கி கிங்சிஞி, ஆத்திச்சூடி, திருக்குறள் 1,2,3, வரிசை எண்கள் எழுதினாள். குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் எவ்வித உரையாடல்களும் இருப்பதாக தெரியவில்லை.

பால் வாடிக்கு எதிரே மாட்டு வண்டிகள், இரவு நேரத்தில் கேலிகள், ஆயிரம் விமர்சனங்கள், கதைகள் இளைஞர்களுக்கு பொழுது இங்கே தான் விசலானமான இடம்.

ஒரு வட்டம் போட்டு அதன் உள்ளே பம்பரத்தை வைத்து கையில் பம்பரத்தை எடுத்து கயிற்றில் சுற்றி வட்டத்தினுள்ளே இருக்கும் பம்பரத்தின்மேல் அடிப்பார்கள். பம்பரத்தின் மேல் படும். சிலர் அடிக்கும் போது மட்டையாகி விடும். மட்டையானல் உள்ளே வைக்கவேண்டும்.

செல்லமுத்து பம்பரத்தை சுற்றிவிட்டான். ஒரே அடி பம்பரம் இரண்டாக பிழிந்து போய்விட்டது.

ஒக்காலி உனக்கு எவ்வளவு மோன.

இப்ப வை டா.

செல்லமுத்து பம்பரத்தை கையில் எடுத்து சுற்ற கையில் நடுவில் வைத்து சுற்றிக் கொண்டே இருந்தது. பக்கத்தில் பெரிய பூவரசம் மரம் அதன்கிளைகளை கீழே பரப்பிக் கொண்டே இருக்க அதன் அடியில் குண்டு விளையாடுவார்கள். சற்று தள்ளி துரையண்ணன் பெட்டிக்கடை.

துரையண்ணணே... ஒரு சிகரெட் கொடு. பத்து ரூபாய் கொடுப்பா.

அண்ணே நாளை தாரேன் காசு இல்ல கணக்குல எழுதி வச்சுக்கோ. சின்னையா சொன்னான். சிகரெட் வாங்கி மரத்திற்கு பின்னால் சென்று சிகரெட் உள்ளே இருக்கும் துகள்களை இடது கையில் தட்டினான் பேப்பரில் காகிதத்தில் மடித்து வைத்திருந்த பொட்டணத்தை எடுத்து சிகரெட் துகளுடன் போட்டு நன்றாக கசக்கினான் இடது கையில் இருக்கும் துகளை சிகரெட்டை வலது கையில் பிடித்து நன்றாக ஏத்தி பற்ற வைத்தான். 4 இழுப்பு சின்னையா கண் எல்லாம் சிவந்து போயி இருக்க.

"போனால் போகட்டும் போடா"...

பாடலை பாடினான். பல பேருக்கு இதுதான் மருந்துக்கடை துரையண்ணன் கடைதான்.


இரவில் பூவரச மரத்தை பார்க்க பயமாக தான் இருக்கும்.

அடர்த்தியான மரம். பல தலைமுறைகளை கண்ட மரம். ஆட்டு மந்தையை சுற்றி போஸ்ட் மரத்தில் இருக்கும் மஞ்சள் விளக்கு பிரகாசமாக எரிந்துக் கொண்டிருக்கிறது. சுற்றிலும் வீடுகள், கொஞ்சம் செடிகள், பன்னிகள் கூட்டம்.

அம்மா...

என்னடாஞ். வயிறு வலிக்குது ஆட்டு மந்தைக்கு போடா. இருட்டா இருக்குமா. இருடா வாரேன்னு சொல்லி சோத்தை இறக்கி வைத்து விட்டு ஓடி வந்தாள் நாகம்மாள். மஞ்சள் நிழல் வெளிச்சத்தில் டவுசர் அவித்து அம்மாவிடம் கொடுத்து விட்டு அமர்ந்தான். பால்பாண்டி சுற்றி பார்த்தான்.

எல்லாமே விட்டைகள், பின்னால் பன்னி நிற்க எழுந்து தள்ளி உட்கார்ந்தான். பன்னி அதனை தின்றது, கழுதை விட்டை, பால்வாடியின் எதிரே தான் இத்தனை விட்டைகள் விட்டைகளை சுற்றி வீடுகள் மாட்டுவண்டிகள் மீது அமர்ந்து இளைஞர்கள் தோட்டா போடுவார்கள் இந்த பாதை வழி போக தான் மனிதர்கள் போயி வாரங்க ஆட்டுமந்தை அப்படியே தான் இருக்கு. ஆட்டு மந்தையன்னு ஊரில் யாரிடமும் கேட்டால் சரியாக சொல்லுவார்கள். எங்க ஊருக்கு இதுதான் ஆட்டுமந்தை. இங்கு ஆடுகள் இல்லவே இல்ல. பெரிய விலாசமான இடம்.



**மா. மணிகண்டன்,**

தமிழாசிரியர், கோம்பை,

உத்தமபாளையம் வட்டம்

தேனி மாவட்டம்.

Manikandanmani0015@gmail.com

# வாழ்த்துகிறோம்!









30.5.2022 அன்று தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் 13-வது ஆண்டு பட்டமளிப்பு விழா மேதகு தமிழக ஆளுநர் திரு.ஆர்.என். ரவி, உயர்திரு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பொன்முடி, இந்திய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் இயக்குனர் திரு.வி. காமகோடி மற்றும் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் திரு.பார்த்தசாரதி அவர்களும் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் திருமதி.லலிதா அவர்களுக்கு ஆய்வியல் நிறைஞர் பட்டம் வழங்கப்பட்டது. (Master of philosophy in computer science first class with distinction).

இவர் கலைமாமணி டாக்டர் நடிகர் பூவிலங்கு மோகனின் வளர்ப்பு மகள் ஆவார். மேலும் மேலும் திருமதி.லலிதா அவர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றியடைய மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

# அதே மேடை! மாறும் காட்சிகள்




**அன்று:** ஒரு அறை உள்ள வீட்டில் ஐந்து பத்து பேர் ஒன்றாக வாழ்ந்தோம்.

**இன்று:** ஐந்து பத்து அறை உள்ள வீட்டில் ஒருவர் இருவர் மட்டும் வாழ்கிறோம்.

**அன்று:** ஆயிரம் பேருக்கு உதவி செய்தவன் யாரிடமும் விளம்பரம் இல்லாமல் வாழ்ந்தார்.

**இன்று:** ஒரு நபருக்கு உதவி செய்தவனை ஆயிரம் பேர் தெரிந்து கொள்கிறார்கள்.

**அன்று:** வயறு நிரப்புவதற்காக பல கிலோமீட்டர் தூரம் நடந்து வேலைக்கு சென்றோம்.

**இன்று:** வயறு குறைப்பதற்காக பல கிலோ மீட்டர் தூரம் நடைப்பயிற்சி செய்கிறோம்.

**அன்று:** வாழ்வதற்காக சாப்பிட்டோம்.

**இன்று:** சாப்பிடுவதற்காக வாழ்கிறோம்.

**அன்று:** வீட்டிற்குள் உணவருந்திவிட்டு கழிவறையை வெளியே பயன்படுத்தினோம்.

**இன்று:** வெளியே உணவருந்திவிட்டு கழிவறையை வீட்டுக்குள் பயன்படுத்துகிறோம்.

**அன்று:** மானம் காப்பதற்காக உடை அணிந்தோம்.

**இன்று:** மானத்தை வெளியுலகத்திற்கு காட்டுவதற்காக உடை அணிகிறோம்.

**அன்று:** கிழிந்த ஆடைகளை தைத்து பயன்படுத்தினோம்.

**இன்று:** தைத்த ஆடைகளை கிழித்து பயன்படுத்துகிறோம்

**அன்று:** இருப்பதை வைத்து பண்டிகை காலத்தை கொண்டாடினோம்.

**இன்று:** பண்டிகைக்கு ஏற்றது போல் கொண்டாடுகிறோம்.

**அன்று:** ஆசிரியரிடமிருந்து உதை வாங்காமல் இருக்க மாணவர்கள் ஆண்டவனை வேண்டினார்கள்.

**இன்று:** மாணவர்களிடமிருந்து உதை வாங்காமல் இருக்க ஆசிரியர்கள் ஆண்டவனை வேண்டுகிறார்கள்.

அனுப்பியவர்:

**கோவில்பட்டி முத்துலட்சுமி**

# எதிர்நீச்சல்!

**– கவிஞர் சுகந்தீனா**



**ரா**மநாதன் செல்போனில் யாரிடமோ பேசியபடி உள்ளே வந்தார். ஆமாங்க...

அந்த பெரிய ஆலமரம் இருக்கு இல்லையா அது பக்கத்துல ஒரு தெரு திரும்புதே அந்த தெருவுல வந்தா எங்க வீட்ல தாங்க முட்டும் என்றவராய்...

வேணி... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க தெருமுனைக்கு வந்துட்டாங்க வீணா ரெடியாகிட்டாளா. பலகாரம் காப்பி எல்லாம் ரெடியா இருக்கா என்று கேட்டவராய் வாசலுக்கும் உள்ளேயும் நடந்து கொண்டிருந்தார்.

நான்சிக்கு கண்கள் மட்டுமே புத்தகத்தில் புதைந்திருந்தது மனம் மொத்தமும் வெளியில் அனைவரும் பேசிக்கொண்டிருப்பதில் நிலை கொண்டிருந்தது...

மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டார்கள் போலும்... வாங்க வாங்க வாங்க எல்லாரும் சௌக்கியங்களா என்றவராய் அனைவரையும் அழைத்து உட்காருங்க நீங்க இங்க உட்காருங்க என்று அனைவரையும் உட்கார வைத்துக் கொண்டிருந்தார் அப்பா.

மாப்பிள்ளையின் அப்பா ஆரம்பித்தார். இவன் எனக்கு ஒரே புள்ளைங்க உங்களுக்கும் ஒரே பொண்ணுன்னு புரோக்கர் சொல்ல கேள்விப்பட்டேன். போதும் போதும்ன்ற அளவுக்கு சொத்தும் பணமும் இருக்கு. கண்ணுக்கு லட்சணமா பொண்ணு வேணும்னு ரொம்ப நாளா தேடிக்கிட்டு இருக்கோம்.

உங்க பொண்ணு... போட்டோல பார்த்தா லட்சணமா தெரிஞ்சது அப்படியே ஒரே பொண்ணு வேற... ஒண்ணுக்குள்ள ஒண்ணா இருந்துக்கலாம் சொத்தும் எங்கேயும் போயிடாது அதனாலதான் போய் பார்த்துட்டு வந்துடலாம்ன்னு கிளம்பி வந்துட்டோம் என்றார்

ரொம்ப சந்தோஷமுங்க... நல்லநேரம் போகுது... வீணாகிட்ட காஃபி எடுத்துகிட்டு வர சொல்லுமா என்றவர்...



மாப்பிள்ளை தம்பி எங்கோ வெளியூர்ல வேலை பார்க்கிறதா சொன்னாங்களே. எந்த ஊர்ல வேலை பாக்கறாருங்க என்றார் அப்பா...அப்பா பேசும் பேச்சுக்களையே தாங்கிக் கொண்டு அமைதியாக இருந்து கொண்டிருப்பவள்.

பெற்றவர்கள் அவர்கள்... ஆனால் அவமான சின்னமாக பார்ப்பது நான்சியை... இது தெரியாமல் இருக்க அவ்வப்போது ஊர் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

நான்சி அப்பாவிடம் திட்டு வாங்காத நாளே இல்லை குற்றமனைத்தும் நான்சி செய்ததுபோல எடுத்ததற்கெல்லாம் எடுத்தெறிந்து பேசி திட்டிக்கொண்டிருப்பார்.

வந்திருந்த அனைவரும் வீட்டிற்கு கிளம்பியதும்...

அப்பாவின் குரல் கேட்டது. அப்பா வந்துவிட்டார் போலும் நல்ல சம்மந்தம் இது... இந்த தறித்தறத்தால ஏதாவது குழப்பம் வந்துடுமோன்னு பயமா இருக்கு வேணி அவள கூட்டிட்டு போய் எங்கவாது ஒரு ஆசிரமத்தில் சேர்த்து விட்டுடுவோமா? அவளால இவ வாழ்க்க பாழா போய்டக்கூடாது பாரு என்ன சொல்ற நீ...? வந்தவங்க எல்லாம் என்ன கேட்டாங்க உன்னான்ட...?

நீ என்ன சொன்ன...? என்று கேள்வி மேல் கேள்வி அடுக்கிக் கொண்டே சென்றார் இராமநாதன். அம்மா பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். கேட்கிறேனில்ல இப்படி எதுவும் பேசாம இருந்தா என்ன பண்றது என்றார் சற்று கனத்த குரலில்...

வழக்கம்போல் அம்மாவின் விசும்பல் சத்தம் கேட்டது நான்சிக்கு... தன்னை எப்படியாவது தலை முழுக வேண்டும்என்று நினைக்கும் அப்பா...

என்ன செய்வதென்று புரியாமல் அம்மா... தங்கையின் வாழ்க்கை ஒருபக்கம்... விதியின் பிடியில் நான்சி... அப்பாவின் கேள்விகளுக்கு அம்மாவாள் என்றுமே பதில் சொல்ல முடியாது.

பாசமாக பெற்ற மகன் பாரமாகி போனதன் விளைவு... மகனென்று நினைத்து வளர்த்தால் மகளாகிப் போனது யார் செய்த குற்றம்...?

நான்சிக்கு கண்கள் பனித்தன... அணிந்திருந்த துப்பட்டாவால் துடைத்துக் கொண்டு சத்தமின்றி எழுந்து போய் தோட்டத்து கதவை திறந்தாள்...

மகனா மகளா என்ற புரியவில்லை என்றாலும் நான்சிக்கு ஒரு மனதுஅனைவரும் பேசிமுடித்தார்கள். தாம்பூலம் மாற்றிக் கொள்ள தேதியும் குறித்துவிட்டார்கள் தாம்பூல தேதிக்கு முன்ன ஒரு நாள் வந்து எங்க வீடு வாசல பார்த்துட்டு வந்துடுங்க என்றார் மாப்பிள்ளையின் அப்பா.

அதனால என்னங்க நிச்சயம் வரோம் என்றார் அப்பா. அனைவரும் கிளம்பினர் அவர்களை வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு உள்ளே வந்தார் அப்பா.இப்பொழுதுதான் வீட்டில் வழக்கம்போல் பூகம்பம் வெடித்தது.

வீணா அம்மா...

நான்சி இருக்கும்போது ஏன் வீணாவுக்கு முதல்ல கல்யாணம் பண்றீங்க அதுகூட பரவாயில்லை ஒரே பொண்ணுன்னு பேசிக்கிறாங்க என்றாள் புனிதா அக்கா. அப்பா இடைமறித்து அவ இப்ப கல்யாணம் வேண்டாம்னு சொல்றாமா... அதனாலதான் வீணாவுக்கு முதல்ல பண்றோம் என்றார்

அதில்லைங்க... ஒரே பொண்ணுன்னு சொல்றீங்களே.அதான் புரியலைங்க என்றாள் சாந்தி அக்கா.

சற்றுநேரம் யாரும் பேசவில்லை எந்த குரலும் கேட்கவில்லை அப்பாவே தொடர்ந்தார்... வேணி... எத்தனை நாளைக்கு தான் மறச்சி மறச்சி வைக்க முடியும் உண்மைய சொன்னாதான ஊரும் புரிஞ்சுக்கும் இல்லன்னா நம்மல தானே தப்பா பேசும் என்றார். ஒரு நல்ல

சம்பந்தம் கிடைச்சிருக்கு இந்தக் குழப்பத்தால அது நின்னுடக் கூடாது என்றவராய் வெளியில் கிளம்பி விட்டார்

அனைவரிடமும் அம்மா மட்டும் தனியாக மாட்டிக் கொண்டார் கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். அம்மா அமைதி காத்து கொண்டிருந்தார். பதில் சொல்ல முடியாமல்...

சொல்லுவேணி ஏதாவது தப்பு தண்டா பண்ணிட்டாளா.

நீங்க ஒரே பொண்ணுன்னு சொல்ற அளவுக்கு அவ என்ன தப்பு பண்ணா என்று கேட்க கேட்க வேணியால் பதில் சொல்ல முடியாமல் அப்படியெல்லாம் எதுவுமில்ல...

எல்லாம் கௌம்புங்க அப்புறம் சொல்றேன் என்றாள்

பண்ணிரண்டு வயது வரை டவுசர் போட்ட நவீன் இப்போது நான்சியாய்... பாவாடை தாவணியில்... சுடிதாரில்மனது இருக்கிறது என்பதைக்கூட மறந்து விட்டார்களே என்று வருத்தம் மேலோங்கியது...

கையில் எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை எங்கே போகிறோம் என்றும் தெரியவில்லை. ஆனால் யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது என்று மட்டும் புரிந்தது நடந்தாள்... நடந்தாள்... நடந்தாள்... நடந்து கொண்டே இருந்தாள்...



இப்படி எத்தனை நான்சிகள் சமூகத்தில்...

குடும்பத்திலுள்ள குமுறல்கள் தாளமுடியாமல் வெளிவந்து இருக்கிறார்களோ... ஆமாங்க வெளியூர்ல தாங்க சொந்த கிராமத்துல இவ்ளோ சொத்து பத்து இருந்தும் பெங்களூர்ல போய் தனியாக தங்கி வேலை பார்க்கிறானுங்க. படிச்ச படிப்பு அப்படிங்க என்றார்... மாப்பிள்ளையின் தந்தை வீணா காபியுடன் வந்தாள். அனைவருக்கும் கொடுத்துவிட்டு அமர்ந்தாள். அம்மா அனைவருக்கும் பட்சணங்கள் கொடுத்தாள்.

சற்று இடைவெளிக்குப் பின் என்ன தம்பி பொண்ணு பிடிச்சிருக்கா என்று வெளிப்படையாக கேட்டார் மாப்பிள்ளையின் அப்பா ரொம்ப புடிச்சிருக்கு பா என்று அவரும் வெளிப்படையாகச் சொன்னார். தொடர்ந்து அப்பா...

வேணி... வீணாவுக்கு மாப்பிள்ளை பிடிச்சிருக்கான்னு கேட்டு சொல்லுமா என்றார். வீணா வேறு அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கே என்ன நடந்தது என்று நான்சிக்கு தெரியவில்லை.

சற்று நேரத்திற்குப்பின் அம்மாவின் குரல் வீணாவுக்கும் மாப்பிள்ளைய ரொம்ப பிடிச்சிருக்காம் என்றாள். ரொம்ப சந்தோஷம்... சரி மற்றதெல்லாம் பேசி முடிங்க என்று யாரோ ஒருவரின் குரல் கேட்க...

அதே குரல்... எங்களுக்கு ஒரே பையன் உங்களுக்கும் ஒரே பொண்ணு கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்திடலாம்... வரதட்சனைன்னு கேட்க என்ன இருக்கு எல்லாமே உங்க ஒரே பொண்ணுக்கு தான என்றார் அவர்.

அவரைத் தொடர்ந்து அப்பா... ஆமாம் ஆமாம் அப்படியே பண்ணிடலாம் என்றார் மனசாட்சி என்ற ஒன்றை பரணில் பதுக்கி வைத்துவிட்டு...ஆண்டவன் ஆடும் ஆட்டத்தில் ஆணா பெண்ணா என்று அறியாமல் அனாதை ஆக்கப் பட்டவர்கள்.

வீதி ஓரங்களில் கைத்தட்டி பிழைக்கும் இவர்கள் கடவுளின் குழந்தைகள்...வெளியே வந்த நான்சி தாங்கள் இப்போது மூன்றாம் பாலினம் என்பதை உணர்ந்தாள். திருநங்கை என்ற பெயர் சமூகத்தில் சூட்டப்பட்டு இருக்கிறது என்பதை உணர்ந்தாள். காலம் மாறி இருப்பதால் சமூகத்தில் தங்களுக்கும் ஒரு மரியாதை அந்தஸ்து கிடைத்திருப்பதை எண்ணி இந்த வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதாக மாற்றுவோம் என்று நான்சி நினைத்தாள்.ஆறு வருடங்கள் முழுதாய் கடந்தது

ஒருநாள் ராமநாதன் தினசரியை புரட்டிக்கொண்டிருந்தார். மூன்றாம் பக்கத்தில் சிறந்த தொழிலதிபருக்கான விருது வழங்கும் விழா என்று விளம்பரப் படுத்தப் பட்டிருந்தது...

அதில் பார்வையை பதித்தவர் அடுத்த பக்கம் புரட்டவே இல்லை... எழுந்து அவசர அவசரமாக கிளம்பினார் மனைவியுடன் விழாவிற்கு...

விழாவிற்கு இவர் வந்தபோது அரங்கம் நிரம்பி வழிந்திருந்தது. இவருக்கு அமரக் கூட இடமில்லை ஒரு ஓரமாக நின்று கொண்டிருக்கிறார்கள் இருவரும்...

அமைச்சரின் உரை முடிந்ததும் சிறந்த தொழிலதிபருக்கான விருதை திருநங்கை நான்சி பெறுகிறார் என்று அறிவிக்கப்பட்டது. ஒரு அழகிய தேவதை போல் உடை அணிந்து ஒரு பெண் வந்தாள்...

அவளுக்கான விருதை அமைச்சர் வழங்குகிறார் அரங்கம் முழுவதும் கரவொலி எழுப்பி விருது வழங்கும் மேடையில் மலர் தூவப்படுவது கண்கொள்ளா காட்சியாக மீடியாக்களின் அணிவகுப்போடு நிகழ்ந்து கொண்டிருந்தது இதைப் பார்த்துக் கொண்டிருந்த ராமநாதன் வேணி தம்பதியரின் கண்கள் ஆனந்தக் கண்ணீரில் குளித்தது... இருப்பினும் மனம் முழுதும் குற்ற உணர்ச்சியில் நிறைந்திருந்தது

வீட்டை விட்டு வெளியில் வந்த நான்சி பள்ளிப் படிப்பை நிறைவு செய்திருந்தவள்

ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் விற்பனை பணியாளராக வேலையில் சேர்ந்து விற்பனை நுணுக்கங்களை கற்றுக்கொண்டவள் படிப்படியாக முன்னேறி குறுகிய காலத்தில் சென்னையில் இருபது டிபார்ட்மென்டல் ஸ்டோர்களுக்கு உரிமையாளராகி சிறந்த தொழிலதிபரான திருநங்கை நான்சி என்ற பட்டத்தோடு மேடையில் மின்னுவதைப் பார்த்து அமைதியாக அரங்கத்தை விட்டு வெளியேறி நான்சி வெளியில் வரும்வரை அரங்க வாசலிலேயே காத்திருந்தனர்...

விழா முடிந்து வெளியில் வந்த நான்சியைக் கண்ட வேணி பாசமிகுதியில் ஓடிச் சென்று கண்ணீரோடு அவளைக் கட்டி அணைத்து கொண்டாள்...

பெற்ற தாயின் நிலை உணர்ந்த நான்சியின் கண்கள் பனித்தன... ஓரமாக நின்றிருந்த அப்பாவிடம் அழைத்துச் சென்று...

அப்பா... நீங்களும் அம்மாவும் இனி என் கூடவே இருந்துடுங்க... வாங்க நம்ம வீட்டுக்கு போகலாம்...

என்று பதிலுக்கு காத்திராமல் இருவரின் கையையும் பிடித்து தன் காருக்கு அழைத்துச் சென்றாள்.




## "நம்பிக்கை.. அதானே எல்லாம்"

சரவணா ஸ்டோர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அண்ணாச்சி தற்போது தி லெஜெண்ட் என்ற திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். விரைவில் வெளியாக இருக்கும் இந்த திரைப்படத்தில் ஊர்வசி ரௌடலா, பிரபு, விவேக் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

சமீபத்தில் இந்த திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நேரு உள்விளையாட்டு அரங்கில் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்றது. படத்தில் நடித்திருந்த நட்சத்திரங்கள் உட்பட பல இளம் நடிகைகள் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதிலும் முக்கியமாக பூஜா ஹெக்டே, தமன்னா, ஹன்சிகா, லட்சுமி ராய் உள்ளிட்ட பல நடிகைகளும் அந்த விழாவிற்கு வந்திருந்தனர். இதனால் அந்த அரங்கமே ரசிகர்கள் கூட்டத்தால் களைகட்டியது. மேலும் அந்த நிகழ்ச்சியில் படத்தின் டிரைலரும் வெளியிடப்பட்டு நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

## தூக்கி நிறுத்திய "டான்"

கிராமத்தில் வாழும் சமுத்திரக்கனி, தனக்கு பெண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால், சிவகார்த்திகேயன் மகனாக பிறக்கிறார். தான் படும் கஷ்டம் தன் மகனுக்கு வர கூடாது என்று நினைத்து, சிவகார்த்திகேயனை படித்து பெரிய ஆளாக்க நினைக்கிறார் சமுத்திரக்கனி. ஆனால், சிவகார்த்திகேயனோ படிக்காமல் பெரிய ஆளாக மாற நினைக்கிறார்.

மாணவர்களின் கல்லூரி படிப்பு, அப்பா மகன் பாசம், இளம் இயக்குனர்களின் உணர்வை படமாக இயக்கி இருக்கிறார் இயக்குனர் சிபி சக்கரவர்த்தி. கதாபாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார். முதல் பட இயக்குனர் என்று சொல்ல முடியாத அளவிற்கு படத்தை கொடுத்து இருக்கிறார். குறிப்பாக கிளைமாக்ஸ் உணர்வுபூர்வமாக இயக்கி இருக்கிறார்.



## தாத்தாவுக்கு பெருமை சேர்த்த பேரன்!

இந்தியில் தேசிய விருது பெற்ற ஆர்ட்டிக்கல் 15 படத்தின் ரீமேக் தான் நெஞ்சுக்கு நீதி. கொலை செய்யப்பட்டு தற்கொலையாக மாற்றப்படும் இரு பெண்களின் மரணம் தான் படத்தின் கரு. அதை தமிழக அரசியலுக்கு ஏற்றபடி கலவை செய்து, கலைஞரின் நெஞ்சுக்கு நீதி டைட்டிலோடு, உதயநிதி நடித்து வெளியாகியிருக்கிறது நெஞ்சுக்கு நீதி.

படம் தொடங்கியதிலிருந்து முடியும் வரை, அம்பேக்கார்பெரியார் சிலைகள், போட்டோக்களுடன் அவர்களின் வரிகள் தான் டயலாக்காக வலம் வருகிறது. ஒருதரப்பினர் சுமக்கும் வலிகளை, வரி வரியாக விவரித்திருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் தொடங்கி, பொள்ளாச்சியில் ஆரம்பிக்கும் கதை.

போலீஸ் மிடுக்கு கொஞ்சமும் குறையாமல், நன்கு தேறியிருக்கிறார் உதயநிதி. அரசியல்வாதிகள் பார்க்கும் ஜாதியையும், ஜாதியை வைத்து அரசியல் செய்து பிழைப்பவர்களையும் சாடியிருக்கிறார்கள்; அதற்காகவே உதயநிதியை பாராட்டலாம். எந்த சமரசமும் இல்லாமல், துணிந்து ஒரு படத்தை கொடுத்திருக்கிறார்கள். விமர்சனங்கள் வரத்தான் செய்யும்; கதையில் உதயநிதி இருக்கும் போது, அதை சமாளிக்க மாட்டார்களா என்ன? படத்திற்கும், கதைக்கும் கவசமே உதயநிதி தான். திமுகவின் அடுத்த அரசியல் பயணத்திற்கும், திமுகவின் இமேஜ்ஜிற்கும் இந்த படம் உதவலாம். நெஞ்சுக்கு நீதி!





## வாய்ப்புகளை அள்ளும் ப்ரியா பவானி சங்கர்

தமிழ் சினிமா உலகில் முன்னனி நடிகையாக திகழ்ந்து கொண்டு இருப்பவர் ப்ரியா பவானி சங்கர். முதலில் இவர் செய்தி வாசிப்பாளராக தான் மக்கள் மத்தியில் பிரபலமாகி இருந்தார். அதன் மூலம் இவர் விஜய் டிவியில் ஒளிபரப்பான 'கல்யாணம் முதல் காதல் வரை' என்ற சீரியலில் நடித்தார். இந்த சீரியல் மூலம் இவருக்கு என்று ஒரு தனி ரசிகர் பட்டாளம் சேர்ந்தது. இதன் மூலம் தான் இவருக்கு சினிமாவில் பட வாய்ப்புகள் கிடைத்தது.

நடிகர் வைபவ் நடிப்பில் வெளிவந்த மேயாதமான் என்ற படத்தின் மூலம் தான் ப்ரியா பவானி சங்கர் தமிழ் சினிமாவில் என்ட்ரி கொடுத்தார். பின் கடைக்குட்டி சிங்கம் படத்தில் நடித்து மிக பிரபலமானார் ப்ரியா பவானி சங்கர். அதனை தொடர்ந்து இவர் நெல்சன் வெங்கடேசன் இயக்கத்தில் எஸ்.ஜே.சூர்யா, பிரியா பவானி, வெங்கடேசன் உள்ளிட்ட பல நடிகர்கள் நடித்து வெளிவந்த "மான்ஸ்டர்" திரைப்படம் வெளியாகி சூப்பர் ஹிட் கொடுத்தது என்று சொல்லலாம்.

சின்னத்திரை செய்திகள்

# கஷ்டங்களைக் கண்டு துவண்டு போகக்கூடாது; கடந்து போகனும் - சின்னத்திரை "ராகவி"


நேர்காணல்: **கி.விடாரண்யம், செய்தி ஆசிரியர்**

ராஜா சின்ன ரோஜா, மகராசன் உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை ராகவி. சினிமாவை தவிர சின்னத்திரையில் கடந்த 26 வருஷங்களுக்கும் மேலாக நடித்து வருகிறார்.

மருதுபாண்டி', 'ஒன்ஸ்மோர்' உள்ளிட்ட சில படங்களிலும் நடித்திருக்கிறார். 'திருமதி செல்வம்', 'மகாலட்சுமி' போன்ற சீரியல்களில் நடித்துள்ளார்.வெள்ளித்திரையிலும் சின்னத்திரையிலும் தனக்கென தனி இடத்தைத் தக்கவைத்திருப்பவர், ராகவி. 28 வருடங்களுக்கும் மேலாக மீடியாவில் பயணிப்பவர். தனக்கான கதாபாத்திரத்தைத் நேர்த்தியாகத் தேர்ந்தெடுத்து நடிப்பவர்.பூந்தமல்லி அருகே உள்ள நேமம் கிராமத்தில் நடைபெற்ற சின்னத்திரை தொடர் மகராசி படப்பிடிப்பில் நடிகர் பூவிலங்கு மோகன் நடித்துக் கொண்டிருந்தவரிடம் பேசியபோது...

`12 வயதில் மீடியாவில் என்ட்ரி ஆனேன். குழந்தை நட்சத்திரமாக `ராஜா சின்ன ரோஜா' படத்தைத் தொடர்ந்து நிறைய வாய்ப்புகள் வந்துச்சு. பிறகு, `மருதுபாண்டி', `ஒன்ஸ்மோர்' போன்ற படங்களில் நடிச்சேன். படங்களில் நடிக்கும்போதே சீரியல் வாய்ப்பு வந்துச்சு. சின்ன வயசுங்கிறதால் ரொம்பவே ஆக்ட்டிவா இருப்பேன். எதையும் சேலேஞ்சா எடுத்துட்டு செஞ்சு காட்டிடணும்னு துடிப்பு. வீட்டுல நடிக்கிறதுக்குத் தையில்லை என்றாலும், படிப்பும் ரொம்ப முக்கியம்னு சொல்லிட்டாங்க. அதனால், படிப்பிலும் கவனமா இருந்து எம்.ஏ டிகிரி வாங்கினேன். காதல் திருமணம். சில ஆண்டுகளிலே கணவர் மறைவு என்னை நிலைகுலைய வைத்துவிட்டது. ஆனாலும் முடங்கி விடாமல் மகளை காப்பாற்ற வேண்டும் என்கிற வைராக்கியத்துடன் மீண்டும் சின்னத்திரையில் நடிக்க ஆரம்பித்தேன். எனக்கு எப்படி எங்க அம்மா பக்கபலமாக இருந்தாங்களோ அதைப்போலவே நானும் என் மகளை ஒரு நல்ல நிலைக்கு வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற எண்ணம் என்னை மேலும் மேலும் உழைத்திட தூண்டியது.










சிவாஜி சார் முதல் கமல் சார் வரை நிறைய பெரிய நட்சத்திரங்கள் என் நடிப்பைப் பாராட்டியது உண்டு. தொடர்ந்து சினிமாவில் நடிக்கும் எண்ணத்தில் இருக்கேன். காஸ்டியூம் பொறுத்தவரைக்கும் என் ஜாக்கெட்டை நானே டிசைன் பண்ணிப்பேன். ஷூட்டிங்குக்காக மட்டும்தான் சேலை கட்டுவேன் மற்றபடி, என்னுடைய ஆல் டைம் ஃபேவரைட், ஜீன்ஸ் அண்டு டாப்ஸ். எதிர்காலத்தில் டெய்லரிங் யூனிட் ஆரம்பிக்கும் எண்ணமும் இருக்கு'' என்றார். பொதுவா, எந்தக் கஷ்டத்தையும் ஈஸியா கடந்துடறது என் பாலிஸி. எதையும் பாசிட்டிவ் கோணத்தில் பார்ப்பேன். ராகவேந்திராவும், பாபாவும் என் இரு கண்கள். ராகவேந்திரா என் அப்பா, பாபா என் குரு. ரெண்டு பேர் மேலும் அளவுகடந்த பக்தியும் அன்பும் வைச்சிருக்கேன். என்னை அவங்கதான் வழிநடத்தறதா நம்பறேன்.என்று உறுதியாகச் சொன்ன ராகவியிடம் கலைத்துறையில் வெள்ளிவிழாக் காணும் நீங்கள் பொன்விழா காண வாழ்த்துகிறோம் என்று வாழ்த்தினோம்!

"**நா**ன் யார் நான் யார் நீ யார் நாலும் தெரிந்தவர் யார் யார்"

என்று பாடிக்கொண்டே உள்ளே வந்தார் கபாலி கான்.




என்ன ஆச்சு வெயிலின் பாதிப்பு என்று கேட்க நினைத்து கேட்டால் கோபித்துக் கொள்வார் என்பதற்காக கேட்கவில்லை. வெள்ளரிப் பிஞ்சுகளை துண்டு துண்டுகளாக நறுக்கி அதை மோரில் போட்டு கொஞ்சம் ஐஸ் கட்டிகள் நிரப்பி கொடுத்தோம். வாங்கி நிதானமாக குடித்தவர் "நல்லா இருக்கீங்களா "என்று கேட்டார்.

என்னாச்சு என்றோம்.

ஒரே பரபரப்பா இருக்குங்க?

***அப்படியா?***

ஆமாம் .போன மே மாதம் முழுக்க பரபரப்பு தான்.

ஒஹோ!

* பேரறிவாளன் விடுதலை

* மத்திய அரசு பெட்ரோல் கலால் வரி குறைப்பு

* மோடி வருகை

* கலைஞர் சிலையை

திறந்து வைத்த வெங்கைய்ய நாயுடு




* அண்ணாமலை, எடப்பாடி நிருபர் பேட்டி

* பாஜக முற்றுகைப் போராட்டம்

அப்படின்னு மே மாதம் பூரா விறுவிறுப்பான காட்சிகளுக்கு பஞ்சமில்லாமல் தமிழகம் விளங்கியது.

***பரபரப்பு இந்த மாசம் தொடருமா?***

நிச்சயமா!

***என்ன நடக்கும்?***

திமுகவுக்கு மாற்றாக பா.ஜ.கதான் என்ற நிலையை அண்ணாமலை உருவாக்க எல்லா முயற்சிகளும் எடுத்து வருகிறார். அது கைகொடுத்து வரும் வேளையில் அதற்கு பிரேக் போடும் விதமாக அதிமுக முன்னாள் அமைச்சர் பொன்னையன் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்.



***"என்ன சொல்லுகிறார்"?***

"அதிமுகவை மெல்ல பின்னுக்கு தள்ளி விட்டு பாஜக தன்னை முன்னிலைப் படுத்திக்கொள்கிறது. இதை அதிமுக அனுமதிக்கக்கூடாது."

என்று குரல் எழுப்புகிறார்.

***சரிதானே?***

தொண்டர்களின் மனநிலை அதுவாக

இருந்தாலும் கட்சியின் இரு பெரும் தலைவர்கள் பாஜகவை ஆதரிப்பதற்கு முந்திச் செல்வது நீயா நானா என்று போட்டி போடுகிறார்கள்.

எனவே பொன்னையன் கருத்து எடுபட வாய்ப்பில்லை. ஆனால் கழகத்துக்கு வழிவகுக்கும்.

**எப்படி?**

அதிமுக சார்பில் ராஜ்ய சபை வேட்பாளராக தன்னை அறிவிப்பார் என்று கட்சியில் முன்னணியில் இருக்கும் தலைவர்கள் எதிர்பார்த்தார்கள்.

அது கிடைக்காத பட்சத்தில் கட்சியில் பணியாற்றும் வேகத்தை குறைத்துக் கொண்டார்கள். இது வரும் 2024 பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை பாதிக்கக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள்.

**"அது தலைமைக்கு தெரியாதா என்ன?**

நிச்சயம் தெரியும் ஆனால் பாஜகவையும் பகைத்துக்கொள்ள இரட்டை தலைமை விரும்பவில்லை. வரும் பாராளுமன்றத் தேர்தலில் திமுகவின் மீது ஏதாவது ஒரு குற்றச்சாட்டை மக்கள் மத்தியில் பரப்பி அதில் வாக்குகளை அள்ளலாம்என்றுபாஜகதிட்டமிட்டுள்ளது. குறிப்பாக அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு சொல்லி அதை கவர்னரிடம் மனுவாக கொடுத்து அவரிடம் அனுமதி பெற்று வழக்கு தொடர்ந்து அந்த வழக்கை பாராளுமன்றம் நேரத்தில் நடத்தி திமுகவை பலவீனப்படுத்தும் முயற்சிக்கு முதல் புள்ளி வைத்தாகிவிட்டது. அதுதான் அண்ணாமலை இரண்டு அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டை சொல்வதும் இல்லை இல்லை 21 அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டு இருக்கிறது என்று அந்தக் கட்சியின் முன்னணித் தலைவர் எஸ் .ஆர். சேகர் சொல்வதும் வைத்து கூட்டிக் கழித்து கணக்கு பார்த்தால் நாம் சொல்வது நடக்கும் என்பது புரியவரும். ஆகையினால் அதிமுகவினர் பாஜகவை எதிர்ப்பதற்கான வாய்ப்பு கொஞ்சம் கூட இல்லை.



**"சரி இதெல்லாம் திமுகவுக்கு தெரியாதா?"**

நமக்கே தெரியும் போது அவர்களுக்கு தெரியாதா என்ன?

விரைவில் குடியரசுத் தலைவர் தேர்தல் வரப்போகிறது அப்போது வெங்கையா நாயுடு குடியரசுத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்படலாம். அவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட திமுகவின் ஆதரவு தேவைப்படுகிறது. கலைஞர் சிலையை திறந்து வைத்த வெங்கைய நாயுடு வெற்றிக்கு தி.மு.க குறுக்கே நிற்காது.

குடியரசுத் தலைவர் ஆன பின்பு வெங்கையா நாயுடுவின் ஆதரவு கிடைக்கும் என்று அவர்களும் ஒரு கணக்கு போடுகிறார்கள்.

**அப்போ காங்கிரஸ் கணக்கு?**

பேரறிவாளன் விடுதலைக்குப் பிறகு தமிழக காங்கிரஸ் காரர்கள் மத்தியில் திமுகவின் மீது கோபம் இருந்தாலும் டெல்லித்தலைமையோடு திமுகவுக்கு இருக்கும் நெருக்கம் எல்லா கணக்கையும் சரி செய்துவிடும் என்று நம்புகிறார்கள். அதற்கு ப. சிதம்பரம் ராஜ்ய சபை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதும் ஆதாரமாகச் சொல்லலாம்.

தமிழகத்தில் இனி எப்போதும் அரசியல் பரபரப்பு ஓயாது .. வரட்டுங்களா என்று சொன்னபடியே வெளியேறினார் கபாலி கான்.

## தாய்மையே அழகு!

பெண்ணாய் பிறப்பதே பெரும்பேறு
பெண் என்பவள் சக்தியின் வடிவம்
பெண் என்பவள் பொறுமையின் படிவம்
பெண் என்பவள் அன்பின் சிகரம்

அந்தியிடம் தோற்றாலும்...
அடுத்த நாள் விடியலுடன் போராடி ஜெயிக்கிறது பாரென...
சூரியனுக்கு ஒப்பிட்டு எனை பிரகாசிக்க வைத்தவள்

பத்து மாதத்தில் மட்டுமல்ல
18 வயதிலும் எனை தடுமாறும் நேரத்தில் தட்டிக் கொடுத்து தாங்கிக் கொள்பவள்

பெண் என்பவள் சுமைதாங்கி
சுமையையும் சுகமாய் சுமக்கும் வரம் வாங்கி
கற்பனைகளுடங்கா கனவுகளை உள்வாங்கி
தன் இன்ப துன்பங்களில் பின்வாங்கி
சமுதாய குப்பைகளெனும் சொல் தாங்கி
உள்ளத்தில் உண்மை அன்பெனும் உளி தாங்கி
சவால்களை சந்திக்கும் சிற்பமாகி
சாதிக்க முடியுமென்ற நம்பிக்கையோடு
எதிர்த்து நின்று போராடி

எதுவாக இருந்தாலும் என்னை கண்டு அஞ்சட்டுமென
எதற்கும் அஞ்சாது...

நாம் தோற்பவர்களாக இருந்திருந்தால் கருவிலேயே கலைந்திருப்போம்
நாம் வெல்ல பிறந்தவர்களென்று...
தட்டிக் கொடுக்கும் ஒவ்வொரு தாயாலும் தான்
இந்த உலகம் தாங்கி நிற்கிறது

இது தாய்மையை தாங்கி நிற்கும் உலகு...
உலகின் அத்தனை இயக்கங்களுக்கும்
பெண்ணே நீதான் அலகு...
தாய்மையே அழகு...



- **இளங்கவி ஷினி,**
கல்லூரி மாணவி,
பண்ருட்டி

## தூக்கிச் சுமக்க ஆள் தேடாதே!

கலைமாமணி, சொல்லின் செல்வர்,
**ஆவடிக்குமார்,** தலைவர், அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்.



துள்ளி எழு...!
உனக்குத்
தூண்டில் போட ...
அங்கே
அணிவகுப்பு
ஆரம்பமாகி விட்டது...!

விழித்துக் கொண்டால்
மண்ணில் மட்டுமல்ல...
விண்ணிலும் உலா வரலாம்...!

தேங்கிக் கிடப்பதால்
நல்ல நீரில் கூட பாசி படியும்...!

அசையாமல் அடங்கும்
இடம் தானே சிறை...?
நீ ஏன் சிறைவாசியானாய்...?

ஏளனம் பேசுவோர் பற்றி
கவலைப் படாதே...!
நீ... நடந்து போனால்
கடந்து போய் விடலாம்...!
தயங்கி நின்றால்
இரையாகி விடுவாய்...!
நீ... இரை அல்ல...?
இயக்கம்...!
இலக்கு வைத்து போராடு...
கண்ணில் கலக்கம் தேவையில்லை...!

உன்னில் உறங்கும்
எண்ணில் அடங்கா
ஆற்றல்களை வீணாக்காதே...!
விரைந்து எழு...!
வீரம் உன் விலாசம்...!
வெற்றி உன் பல்லக்கு...!

சுழலும் பூமி கூட
சூரியனைச் சுற்றுவதால் தான்
உயிர்ப்போடு இருக்கிறது...!
உலகம் வாழ்கிறது...!

உன்னைத்
தாங்கிப் பிடிக்கத்
தன்னம்பிக்கை போதும்...!
தனியாகத் துணை தேடாதே...!

சோர்வு என்பது
சோதனை அல்ல...
சோம்பேறித் தனம்...!

வாழ ஆசைப்படு...!
வலியோடு போராடு...!
காயம் படாத
கால்நடை ஏதும் இல்லை...!
நியாயம் தராத
நீதி நிலைத்ததில்லை...!
கவலை கொள்ளாத
மனிதர் யாரும் இல்லை...!

தங்கிப் போன
தழும்புகள் தானே
தடயங்கள்...!
தடவிப் பார்த்து முன்னேறு...!

தள்ளி நின்று
எள்ளி நகையாடும்...
தளுக்கர் கண்டு தயங்காதே...!

துணிந்து நட ...
துயரம் மறைந்து விடும்...!

சுமை அல்ல நீ...!
தூக்கிச் சுமக்க
ஆள் தேடாதே...!
உன் கால்களை நம்பு...
உலகம் உன் காலடியில்...!

# நாங்கள் உயர்வது எப்போது?



–ப.கார்த்திக்,
மணவூர்

### 10 ஆண்டுகளில் உர மூட்டைகளின் விலை உயர்வு நிலவரம்

| உரங்கள் | 2010 - ம் ஆண்டு | 2020 - ம் ஆண்டு |
|---|---|---|
| யூரியா | 220 | 280 |
| பொட்டாஸ் | 280 | 840 |
| சூப்பர் பாஸ்பேட் | 140 | 380 |
| டி ஏ பி. | 450 | 1300 |
| காம்ப்ளக்ஸ் | 450 | 900 |
| மொத்தம். | 1540 | 3700 |

ஒரு மூட்டை நெல் 2010 -ம் ஆண்டு 900 ரூபாயும் 2020 -ம் ஆண்டு 1100 ரூபாக்கும் விற்பனையானால், அதாவது 10 ஆண்டுகளில் 200 ரூபாய் உயர்வு. எந்த வகையில் முன்னேறுவான்

**விவசாயி?....**



## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

Name : MITRA TIMES
A/C no : 50200012576292
Bank : HDFC Bank
Branch : T.Nagar
IFSC : HDFC0000206

# நடைமுறையில் இல்லாத "பைசா" விலை நிர்ணயம்: எப்படி?



**நா**ன் ஒரு மளிகை கடையில் 100 ரூபாய் கொடுத்து ஒரு கிலோ பாசிபருப்பு வாங்கினேன், அதற்கான விலை 72 ரூபாய் போக மீதி 28 ரூபாய் கடைக்காரர் கொடுத்தார். வாங்கி வந்தேன்.

பிறகு காய்கறி கடையில் ஒருகிலோ வெங்காயம் வாங்கினேன். 50 ரூபாய் கொடுத்தேன். வெங்காயத்திற்கான விலை 30 ரூபாய் போக மீதி 20 ரூபாய் கடைக்காரர் கொடுக்க வாங்கி வந்தேன்

பிறகு ஒரு டீக்கடையில் ஒரு டீ குடித்து விட்டு 15 ரூபாய் கொடுத்தேன். டீ க்கான விலை 12 ரூபாய் போக மீதி 3 ரூபாயை கடைக்காரரிடம் வாங்கி வந்தேன்.

பிறகு பைக் கிற்கு பெட்ரோல் போட பெட்ரோல் நிலையம் சென்றேன். ஒரு லிட்டர் பெட்ரோல் நிரப்ப சொன்னேன்.

பிறகு விலை என்ன என்ற பொழுது 111 ரூபாய் என்றார்கள். நான் அங்கே Price list ஐ பார்த்தேன்.

அதில் 110 ரூபாய் 45 பைசா என்று இருந்தது. அதனால் நான் மீதி 55 பைசா கேட்டேன். அதற்கு அவர்கள் 55 பைசா என்ற பணமதிப்புடைய நாணயமோ, பணத் தாளோ இல்லை என்றார்கள்.

இப்பொழுது என்னுடைய கேள்வி என்னவென்றால் நடைமுறையில் இல்லாத பண மதிப்பில் எந்த அடிப்படையில் இந்திய பெட்ரோலிய நிறுவனங்கள் விலை நிர்ணயம் செய்கின்றன?

இதை இந்திய அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது ஏன் ? ஒரு மளிகை கடைக் காரருக்கும், காய்கறி கடைக் காரருக்கும் டீக்கடைக் காரருக்கும் தெரிந்த பொருளாதர அறிவு பெட்ரோலிய நிறுவனங்களுக்கு தெரியவில்லையா? இல்லை வேண்டுமென்றே நூதனமுறையில் கொள்ளையடிக்கும் தீய எண்ணத்தில் செயல்படுகின்றனவா?

இது பெட்ரோலிய நிறுவனங்கள் மட்டுமல்ல. சில மருந்து பொருள்களிலும் இது போன்ற நிலைமை நீடிக்கிறது.

50ml டெட்டால் 22 ரூபாய் 22 பைசா, Dexyl என்ற இருமல் டானிக் 60 ml விலை 49.ரூபாய் 90. பைசா, Cipla நிறுவன paracip டானிக் 60 ml, விலை 21 ரூபாய் 42 பைசா.

இது போன்ற மீதி பணம் கொடுக்க முடியாத அளவில் பணமதிப்பில்லாத 10 பைசா 20 பைசா 60பைசா நாணயங்கள் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யும் இதுஇது போன்ற நிறுவனங்களை தண்டிக்க இந்திய நுகர்வோர் நல சட்டத்தில் இடமில்லையா? இந்திய நுகர்வோர் நல அமைப்புகளே கொஞ்சம் கண்திறந்து பாருங்கள்!. இது சரியா? தவறா?

**- டாக்டர்.ப.குணசீலன் எம்.பி.ஏ.,**

# கொத்தமல்லி கொசுறு கேட்காதீர்கள்!



எஸ்.ஜானகி

**கா**ய்கறி கடைகளில் தாய்மார்கள் காய்கறி வாங்கி முடித்தபின்பு கொத்தமல்லி கருவேப்பிலை கொசுறு தாங்க என்று கேட்பார்கள். கொசுறாக வாங்கினாலும் கொத்தமல்லியில் உள்ள சத்துக்களை தெரிந்து கொண்டால் அதை காசு கொடுத்து கொஞ்சம் கூடவும் வாங்க தோன்றும்.

உடலில் உள்ள கொழுப்பை குறைத்து சரும ஆரோக்கியத்தை தரும் கொத்தமல்லி.

கொத்தமல்லியின் இலை, தண்டு, வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை. சாம்பார், ரசம் போன்ற தமிழர் சமையலில் இதன் விதைகள் பயன்படுகின்றன. கொத்தமல்லி விதையை தனியா என்றும் அழைக்கின்றனர்.

உங்களுக்கு மென்மையான பட்டுப் போன்ற சருமம் வேண்டுமெனில், 2 டீஸ்பூன் பால், 2 டீஸ்பூன் வெள்ளரிக்காய் சாறு மற்றும் சிறிது கொத்தமல்லி சாற்றினை சேர்த்து நன்கு கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையை குறைக்கிறது, இன்சுலின் சுரப்பைத் தூண்டுகிற ஆற்றல் இருப்பதால், சர்க்கரை நோயைக் குறைக்கும் தன்மை வாய்ந்தது.

கர்ப்பிணிகள் கர்ப்பம்தரித்த மாதத்தில் இருந்து சாப்பிட்டு வந்தால் குழந்தை மிக ஆரோக்கியமாக வளரும். குழந்தையின் எலும்புகள்பற்கள் உறுதி அடையும்.



மூக்கைச் சுற்றி கரும்புள்ளிகள் இருந்தால், 1 டீஸ்பூன் கொத்தமல்லி சாறு மற்றம் 1 டீஸ்பூன் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட பகுதியில் தடவி 1/2 மணிநேரம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ, கரும்புள்ளிகள் அகலும்.

சிலருக்கு முகத்தில் சிவப்பு நிற தடிப்புக்கள் ஏற்படும். இந்த பிரச்சனையில் இருந்து விடுபட, 2 டீஸ்பூன் கொத்தமல்லி சாறு, 2 டீஸ்பூன் தக்காளி சாறு மற்றும் சிறிது ரோஸ்வாட்டர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் உற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவுங்கள். இதனால் நல்ல மாற்றத்தை நீங்களே காண்பீர்கள். கொத்தமல்லியை தினமும் அளவோடு உணவில் சேர்துக்கொள்வது மிகவும் நல்லது அது நரம்பு ,எலும்பு மற்றும் தசை மண்டலங்களில் ஏற்படும் பாதிப்புகளை குணமாக்கும். இது நன்கு பசியைத் தூண்டும் ஒரு மூலிகைத் தாவரம். வாயு பிரச்சனையை குணமாக்கும்.

உதடு கருப்பாக, உள்ளவர்கள் இந்த வழி உங்களுக்கு உதவியாக இருக்கும். தினமும் இரவில் படுக்கும் முன், கொத்தமல்லி இலை சாற்றினை உதட்டில் தடவிக் கொள்ளுங்கள். இன்னும் சிறப்பான பலனைக் காண அத்துடன் சிறிது எலுமிச்சை சாற்றினையும் கலந்து பயன்படுத்துங்கள்.

இரவில் நன்றாக தூக்கம் வர கொத்தமல்லியை சேர்த்துக்கொண்டால் நல்ல பலனை தரும். உடல் சூட்டைக் குறைக்க கொத்தமல்லியை ஒரு கைபிடி எடுத்து நன்கு கழுவி மென்று தின்றால் உடல் சூடு குறையும் மற்றும் பசியை தூண்டி விடும்.

சிறிது கொத்தமல்லி இலைகள், தயிர் மற்றும் கற்றாழை ஜெல்லை சரிசமமாக எடுத்துக் கொண்டு நன்கு அடித்து, பின் அதில் 1 டீஸ்பூன் அரிசி மாவு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ, சருமம் மென்மையாகவும், பொலிவுடனும் இருக்கும்.

# மறையும் பவள பாறைகள்! மீண்டுவர நம்பிக்கைகள்!

## முனைவர். பா. ராம் மனோகர்



இயற்கை என்றும் அழகானது, மட்டுமல்ல !அற்புதங்கள் நிறைந்தது !ஆம் ! கடல்,பல்வேறு அரிய உயிரினங்கள் கொண்டதாகும் !மீன்கள் மட்டும் அல்ல, நண்டு, சிப்பி, இறால், மெல்லுடலி, மிதவையுரிகள், ஆகியவை மகிழ்ச்சியுடன் வசித்துவரும் இடம் !மனித குலம் தழைத்தோங்க, பருவ கால மாற்றம், பாதிப்படையாமல் இருக்கவும் உதவி செய்ய கடலின் சூழல் ஆரோக்கியமாக இருப்பது அவசியம் ஆகும்.

இந்த இன்றியமையாத இயற்கை அமைப்பில் முக்கிய பங்கு வகிப்பது பவள பாறைகள் (CORAL REEFS)! ஆனால் இவை உயிரற்ற பொருட்கள் அல்ல! முதுகெலும்பற்ற வகை உயிரினம், பாலிப்புகள் (POLYPS) கூட்டமாக காலனி ஆக வசிக்கும் நிலை பவள பாறைகள் ஆகும்.

பவளப்பாறைகள் உலகில் 6000 சிற்றினங்கள் அமைந்துள்ளன. அடிப்படையில் கடினம் மற்றும் மென்மையான பவள உயிரினங்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. மிகவும் நுண்ணிய பாலிப்புகள் சிறு உணர்கொம்புகள் கொண்டவை, அதன் மூலம் நுண்ணிய மிதவை உயிரிகளை உண்ணக்கூடியவை. பாலிலா இனப்பெருக்கமுறை, ஸ்பானிங் (spawning) என்ற முறையில் தன் இனத்தை பெருக்குகின்றன. சரி, இந்த பவள உயிரினங்கள் உண்மையில் கடலில் இருப்பதன் காரணம் என்ன !?தெரிந்து கொள்வோம் !



பூமியில், மேற்பரப்பிலுள்ள, காற்றில் உள்ளது கரியமில வாயு (Carbon di oxide) பவள பாறைகளில் உள்ள (ooxanthalle) பசுமை மஞ்சள் நிற டைனோ பிளாஜல்லேட்டுக்கள், என்றநுண் உயிரினங்கள், அந்த கார்பன் டை ஆக்ஸ்ய்டு வாயுவினை உள்ளிழுத்து,கார்போஹை ட்ரேட் உணவாக மாற்றி, தானும், பவள பாலிப்புகளும், எடுத்து கொள்கின்றன. அந்த டைனோபிளாஜ்லட்டுக்கள் " ஒத்திசைந்த வாழ்வுயிரினங்கள் (SYMBIOTIC ORGANISMS) என அழைக்கப்படுகின்றன. மீதமுள்ள கடலில் கரைந்த சிளி 2, வாயு பவள பாறைகளாய் உருவாகின்றன.

இந்த பவள பாறைகள் அடுக்குகள் (BARRIER), விளிம்பு பாறை (FRINGING), பவள தீவு (ATOLL) என மூன்று வகைகளாக அமைந்துள்ளன.

சரிங்க !

இந்த பவள பாறை நேரடியாக நமக்கு என்ன பயனை தருகிறது !!? நீங்க மனசுல கேட்கிற கேள்வி என் காதிலே விழுது !அதை பத்தி சொல்லட்டுமா !?

இந்த பவள பாறை இருந்தா தான் கடலில் மீன்கள் பெருகும். கடல் மூழ்கி அறியும் சாகச சுற்றுலா, அதிக மெல்லுடலிகள், நண்டு, இறால் உற்பத்தி போன்றவற்றிற்கும் பவள பாறை உயிரினங்கள் காரணம் ஆகும். ஆபரணங்கள் தயாரிப்பு, மருந்துகள் (AIDS, PAIN) உற்பத்தி ஆகியவற்றிற்கும் இதுவே முக்கிய மூல பொருள் ஆக விளங்குகிறது.

இந்த அரிய இயற்கை உடமைகள், பற்றிய தகவல்கள் நம்மில் பெரும்பாலும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை ! ஆம், அதனால் அவை சட்ட பூர்வமற்றநிலையில் கொள்ளை அடிக்கப்படுவது உண்மை !நீருக்குள் மூழ்கி பவளங்களை உடைத்து எடுத்தல், வெடி வைத்து தகர்த்து அபகரிப்பு போன்றவையினால், மனித தலையீடு ஏற்படுத்தி பவளம்



வெண்மை ஆகிவிட்டது!ஆம், CORAL BLEACHING, பாதிப்புகள் உருவாக்கி அழிவு ஏ ற்படுகிறது.

ப்ளீசிங் என்பது கடின பவள பாறை அல்லது பாலிப்புகள் தம் நிறத்தை இழந்து வெண்மை ஆக மாறுதல் ஆகும். கடலின் மேற்பரப்பில் வெப்ப உயர்வு, மனித இடையூறு, இதற்கு காரணம் என அறியப்பட்டுள்ளது. பவளம் பாலிப்புகளின் திசுக்க லில் உள்ள பாசி (Zooxanthalle) நீக்கப்படுவதால், நோய் ஏற்பட்டு பவளப்பாறைகள் பாதிப்பு, பட்டினியால் அடைகிறது. உலகில் முதலில் 1998 ஆம் ஆண்டு இத்தகைய பாதிப்புகள் நிகழ்ந்தன.8%பவள பாறைகள் பாதிக்கப்பட்டாலும் ஆசியகடல் மண்டலத்தில் இவை மீண்டு வருவது மகிழ்ச்சி!

உலகம் முழுவதும் ஒரு பில்லியன் மக்கள் இந்த அரிய சூழலை பொருளாதாரத் திற்கு பெரிதும் நம்பியுள்ளனர். இந்தியா, ஸ்ரீ லங்கா, மாலத்தீவு போன்ற நாடுகளில் மீன் தொழில், சுற்றுலா ஆகியவற்றால் தேசிய பொருளாதார நிலை மேம்பட பவளப்பாறைகள் காரணம் ஆகும். எனினும் இப்பகுதியில், அதீத மீன் பிடிப்பு, கடற்கரை கட்டிட வளர்ச்சி, மாசுபாடு, கடல் மண் படிவாதல், என்ற




மனித செயல்பாடுகள் பவள பாறைகள் அழிய முக்கிய காரணிகளாகும். லட்சதீவுகளில், சமீபத்தில் நகரமைப்பு திட்ட வரைவில் உள்ளபடி,கடற்கரை பகுதியில் கட்டமைப்பு உருவாகும் அபாய சூழல்! அதனால் இயற்கையான கடல் சுற்று சூழலில் கடுமையான பாதிப்புகள் எதிர் காலத்தில் ஏற்படலாம்.

உலக அளவில் கண்காணிக்கப்பட்டு1978–2019 ஆம் ஆண்டு வரை நடத்திய ஆய்வறிக்கையில் 2009–2019,பத்தாண்டுகளில் 14%பவள பாறை கள் அழிந்துள்ளது. எனினும் நம்பிக்கை தரும் விதமாக 2010ஆம் ஆண்டு முதல் பவள பாறைகளில் 20%பாசி அதிகம் உள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த 15 ஆண்டுகளில் உலகம் முழுவதும் இப்பாறைகள் குறைவுதான். எல்நினோ கடல் வெப்பம் உயர்வும் ஒரு காரணம் ஆகும்.2016லும் இந்த பாதிப்பு அதிகம்.ஆனால் 2021ல் மிக குறைவான ப்ளீசிங் பாதிப்புகள் பதிவு ஆகியுள்ளது.2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உலக கடல் ஆராய்ச்சி விஞ் ஞானிகள் ஆஸ்திரேலியா பெரும்பவள(GREAT BARRIER REEF) பாறைபகுதியில் புதிய வண்ணமய பவளங்கள் உற்பத்தி கண்டு நம்பிக்கை, மகிழ்ச்சி கொண்டுள்ளனர். இந்தோனேஷியா நாட்டிலும் பவள பாறை பகுதியில் மீன்கள் அதிகரித்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. இந்தோ பசிபிக் கடல் பகுதியில் இவுயிரினங்கள் மீண்டுவருவது பற்றி (STATUS OF CORAL REEFS OF THE WORLD2020) ஒரு ஆய்வு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மகிழ்ச்சிதான், நம் பொதுமக்கள், கடல் சூழல், என்பது மீன்கள், கடல் உணவுக்கு மட்டும் ஒரு அட்சய பாத்திரம் மட்டும் அல்ல என்றும், பருவகால மாற்றங்கள் எதிர்கொள்ளும் ஒரு இயற்கை தடுப்பு என்றும் அறியவேண்டும். மாசுபாடு, அத்துமீறிய கொள்ளை, மீன்பிடித்தல், தவிர்க்க வேண்டும். பவளபாறை கள் பாரில் இருந்தால் மட்டுமே புவியில், மனித இனம் புன்னகை உடன் வாழ இயலும்.

# ஐவர் மலை அய்யர் மலை ஆனது!

தமிழ்நாட்டின் கரூர் மற்றும் திருச்சி மாவட்டத்தில் இருந்து சுமார் 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது குளித்தலை.இங்கு காவிரிக் கரையோரம் உள்ள மலை ஒன்றில் அமைந்துள்ள ரத்னகிரீஸ்வரர் ஆலயம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்த ஆலயம் இரண்டாம் குலோதுங்க சோழனால் கட்டப்பட்டுள்ளது.



இந்த ஆலயத்துக்கு இரத்னகிரி என்ற பெயரைத் தவிர, வாட்போக்கி, மாணிக்க மலை, சிவாய மலை, ஐயர்மலை என்று வேறு பெயர்களும் உண்டு.

பாண்டவ சகோதரர்கள் ஐந்துபேரும் தமது வனவாசத்தின்போது இந்த மலையில் வந்து தங்கியதினால் இந்த மலைக்கு ஐவர் மலை அதாவது ஐந்து சகோதரர்கள் என்ற பெயர் வந்ததாம். காலப்போக்கில் ஐவர்மலையை அய்யர் மலையாக ஆக்கிவிட்டார்கள்.மலை உச்சியில் அமைந்துள்ள ரத்னகிரீஸ்வரர் ஆலயத்துக்கு செல்ல வேண்டும் எனில் சுமார் 1017 படிகளில் ஏறிச் செல்ல வேண்டும்.

தமது குல தெய்வம் யார் என்பது தெரியாதவர்கள் இங்குள்ள ரத்னகிரீஸ்வறரை தமது குல தெய்வமாக ஏற்றுக் கொண்டு பூஜிக்கலாம். இறைவன் அதற்கு அப்படிப்பட்ட சக்தியை தந்துள்ளாராம்.

இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். 1178 அடி உயரமும் 1117 படிகள் கொண்ட மலை மீது அமைந்துள்ள மிகவும் சிறப்பு வாய்ந்த சிவதலம். மலைகோயில் 1200 படிகள். கடம்பர் கோயில் (குளித்தலை), திருவாட்போக்கி, திரு ஈங்கோய்மலை ஒரே நாளில்காலை, பகல், மாலையில் தரிசிக்கும் மரபு இங்கு உள்ளது.

சித்திரை மாதங்களில் சூரிய கிரணங்கள் சுவாமி சன்னதிக்கு நேரேயுள்ள நவத்துவாரங்களின் வழியே சிவலிங்கத்தின் மீது விழுகின்றது. சுவாமிக்கு பால் அபிசேகம் செய்த பச்சை பால் மாலை வரை கெடாது. பத்தி, கற்பூரம் ஆகியவை பாலில் விழுந்த போதிலும் கெடுவதில்லை. அபிஷேகம் செய்த பால் சிறிது நேரத்தில் கெட்டியான சுவை மிகுந்த தயிராக மாறி விடுகிறது. இது இக்கோயிலின் இன்று வரை நடக்கும் அதிசயமான ஒன்றாகும்.சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 64 வது தேவாரத்தலம் ஆகும்.

திறக்கும் நேரம்: காலை 6 மணி முதல் 11 மணி வரை, மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

முகவரி: அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் மலைக்கோயில், அய்யர் மலை ரு வாட்போக்கி, குளித்தலை, சிவாயம் அஞ்சல்639 120, வைகல்நல்லூர் வழி, கரூர் மாவட்டம். போன்: +914323245 522



# ஆன்மீகத் தகவல்கள்



தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள கூரம் கிராமத்தில் மே 25ஆம் தேதி ஸ்ரீ லட்சுமி நாராயணர் கோயில் அஷ்ட பந்தன நூதன கும்பாபிஷேகம் ஸ்ரீமத் பரமஹம்சத்யோதி ஸ்ரீ வானமாமலை ஜீயர் சுவாமிகள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் அன்னையின் திருவுருவம் மூன்று ஆண்டுகளுக்கு முன் தற்போதைய கவர்னர் ஸ்ரீமத் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் திருக்கரங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீமன் லக்ஷ்மி நாராயணன் கல்வி மற்றும் அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் ஸ்ரீ மாதவ ராமானுஜதாசன் வி.ஜி.ரங்கசாமி அவர்களின் கனவில் தோன்றி தனக்கு ஆலயம் அமைக்க கூறியதால், அறங்காவலர்கள் ஸ்ரீ கிருஷ்ணவேணி மற்றும் ஸ்ரீ சந்திரசேகர் ஆகியோர் உதவியுடன் ராமானுஜம், கூரத்தாழ்வார், ஆண்டாள், தாயார் மற்றும் ஸ்ரீ லட்சுமி நாராயணன் கோயிலை கூரத்தில் கட்டியுள்ளனர். சோளிங்கர் ஸ்ரீராம் பட்டாச்சாரியார் மற்றும் குழுவினர் 3 நாட்கள் அனைத்து கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம் கும்பாபிஷேகம் ஏற்பாடு செய்யபட்டு சிறப்பாக நடந்தேறியது. கும்பாபிஷேக குழுவின் தலைவர் பாரத சிக்ஷா ரத்னா டாக்டர் எம்.ரஜினி சுதர்சன் ஆனந்த் தலைமையில் கோவிலில் திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடத்தினர்.

மேலும் முனைவர் மு. ரஜினி அவர்கள் முன்னின்று நடத்திய திருவிளக்கு பூஜையில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டு சிறப்பு செய்யதார்கள். இவர் சிறந்த கல்வியாளரும், சமூகசேவகரும் மற்றும் அல்லாமல் இப்போது தனது ஆன்மிக சொற்பொழிவுகள், ஆன்மிக பதிவுகள் என பல பரிணாமான பயணத்தின் ஒரு பாகமாகவும் இதனை செய்யதுள்ளார். ஸ்ரீ வெங்கடேசன் அவர்கள் கோவில் கோசாலைக்கு பசு தானமாக வழங்கி கோபூஜை நடத்தினர். இந்த நிகழ்ச்சி சிறப்பாக அமைத்த குழுவினர் ரஜினி, ஷோபனா மற்றும் நன்கொடை வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் கோடானகோடி நன்றிகளை ஆலைய நிர்வாகிகள் தெரிவித்தனர். 3 நாட்களும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஸ்ரீ லட்சுமி நாராயணனை தரிசனம் செய்து வந்தனர்.



ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது. மேலும் மே 26 முதல் ஜூலை 12 வரை நாற்பத்தெட்டு நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். இதில் பக்தர்கள் கலந்துகொண்டு கூரம் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கோயிலின் தெய்வீக அருளைப் பெறலாம்.

– வி.ஜி.ரங்கசாமி

மித்ரா கிட்சன்

# கொரியன் சீஸ் கார்ன்



S. கவிதா, சிட்லபாக்கம்

தேவையான பொருட்கள்: Sweet corn, சீஸ், வெண்ணெய் சிறிதளவு, Chilli flakes சிறிதளவு, மிளகுதூள் சிறிதளவு.

செய்முறை: அடுப்பில் ஒரு Pan வைத்துக் கொள்ளவும்.Pan சூடானதும் சிறிதளவு வெண்ணெய் சேர்த்துக் கொள்ளவும் . வெண்ணெய் உருகியதும் Sweet corn சேர்த்துக் கொள்ளவும். இரண்டு நிமிடம் நன்றாக கலந்து விடவும். பிறகு துருவிய சீஸ் சேர்த்துக் கொள்ளவும். பிறகு நன்றாக கலந்து கொள்ளவும். இரண்டு நிமிடம் கழித்து மிளகுதூள், Chilli flakes தூவி விடவும். இப்பொழுது குழந்தைகளுக்குப் பிடித்த அட்டகாசமான, டேஸ்ட்டான Korean Cheese corn ரெடி.

# சிறு தானிய தோசை!

**தோசை** என்றால் யாருக்குதான் பிடிக்காது!? ஆமாம், ஹோட்டல் போனாலே முதலில் மற்றவர் மேசைக்கு சர்வர் எடுத்துட்டு போகும்போது, நம் கண்ணில், அந்த பொன்னிற, மொற, மொற, தோற்றம்!நாசியினை லேசாய் வருடும், இரைப்பையில், பசியினை தூண்டும்! ஆனால் ஆர்டினரி மாவு, நெய் ரவா, வெங்காய தோசை எல்லாம் நீங்க சாப்பிட்டிருப்பீங்க!இல்லையா!? இன்னக்கி நீங்க,ஒரு சத்துள்ள "சிறுதானிய தோசை"செய்துதான் பாருங்களேன்! திணையில் பொட்டாசியம், கால்சியம், மக்னிசியம், துத்த நாகம்,கால்சியம், புரதம், இரும்பு உள்ளது. இதே சத்துக்கள் காணப்படும் கம்பு, சாமை, சிகப்பு கவுனி அரிசி போன்றவை இந்த தோசை தயாராக தேவை!மேலும் வெள்ளை சோளம் இதற்கு உதவும்!




நரம்பு மண்டலம், சீரணித்தல்,சர்க்கரை நோய் குறைபாடு, ஒட்டுமொத்த உடல் நலம் சீராக இந்த சிறு தானியங்கள் பயன்படுகிறது!

சிறுதானிய ரவா தோசை . கம்பு, வரகு, சாமை, சிகப்பு கௌனி அரிசி, திணை அரிசி, ரவா, பச்சரிசி, வெள்ளை சோளம் எல்லாவற்றையும் தலா 250கிராம் எடுத்து மாவு மில்லில் கொடுத்து மாவாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அரைத்த மாவில் தேவையான அளவில் எடுத்துக்கொண்டு அதில் கேரட் துருவியது, முட்டைகோஸ் துருவியது, பச்சைமிளகாய் இஞ்சி நறுக்கியது, எல்லாவற்றையும் கலந்து தேவையான சிறி தளவு அளவு உப்பு சேர்த்து,நீர்க்க கரைத்து ரவா தோசை போல் ஊற்ற வேண்டும். சாப்பிட அருமையாக இருக்கும். சத்துள்ளதும் கூட. கொஞ்சம் முயற்சி பண்ணுங்க!வாசகர்களே!உண்மையில், சந்தோசமா, அடுத்த தோசை கேட்பீங்க, தெரியுமா!!வாழ்த்துக்கள்!!

**– திருமதி. சியாமளாராம்மனோகர், தஞ்சாவூர்.**

# முன்னேற தேவை ஐந்து படிகள்!



**நா**ம் முன்னேறி விட முடியாதபடி தடுக்கக் கூடிய ஐந்து வில்லன்கள் இருக்கிறார்கள்.

யார் ஐந்து வில்லன்கள்..?அந்த ஐந்து வில்லன்கள்: ஊக்கமின்மை, மாற்றம், பிரச்னைகள், பயம் மற்றும் தோல்வி..

இப்போது, சினிமாவில் வருவது போல் இந்த வில்லன்களை ஒவ்வொருவராக எதிர்த்து நிற்போம்.

அவர்களை வெல்லக் கூடிய ஆயுதங்கள் என்னென்ன என்று பார்ப்போம்.

**ஊக்கமின்மை:** நீங்கள் செய்கிற எதையும் மேலோட்டமாகப் பார்க்காதீர்கள். ஆழ்ந்து யோசித்து அதன் உண்மையான நோக்கத்தை உள்ளே பதிய வைத்துக் கொள்ளுங்கள். எதிர்மறையான வார்த்தைகளைத் தவிர்த்து விடுங்கள்..,

**மாற்றம்:** நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும்.. அதைப் புரிந்து கொள்ளுங்கள், முரண்டு பிடிக்காதீர்கள்...

மாற்றம் இல்லாமல் முன்னேற்றம் இல்லை. இதை மனதில் வையுங்கள்.

**பிரச்சனைகள்:** பிரச்சனைகள் நிகழ்ந்தே தீரும். தயாராக இருங்கள், அவற்றை எப்படி எதிர்கொள்ளலாம் என்று முன்கூட்டியே யோசித்துக் கொள்ளுங்கள்,.

ஒன்று அல்ல, மூன்று தீர்வுகளைச் சிந்தித்து வையுங்கள். அத்தனைப் பிரச்னைகளுக்குள்ளும் ஒரு புதிய வாய்ப்பு ஒளிந்து இருக்கும், தேடிப் பிடித்து பயன்படுத்துங்கள்.

**பயம்:** பயம் இல்லாதது போல் நடிக்காதீர்கள். எனக்கு இதை நினைத்து அச்சமாக உள்ளது என்று ஒப்புக் கொள்கிறவன் கோழை அல்ல..

பயத்தை ஏற்றுக் கொள்கிறவனால் தான் அந்தப் பயத்தை வெல்ல முடியும்.. உங்கள் பயத்தின் தொடக்கப் புள்ளி எது என்று யோசியுங்கள், அங்கே அடியுங்கள்.

**தோல்வி:** சறுக்கல்கள் வரும் போது, மாத்தி யோசியுங்கள். தோல்வியும் வெற்றியாக்கலாம். சில செயல்களை நம்மால் கட்டுப்படுத்த முடியும்,

மற்ற பல செயல்கள் நம் கையில் இல்லை. நம்மால் முடிந்ததை மட்டும் தொடுங்கள், சரி செய்யுங்கள்.

நம் வாழ்க்கையில் முன்னேற்றத்துக்கு தடையாகஇருக்கும் ”ஊக்கமின்மை,மாற்றம், பிரச்சனைகள், பயம் மற்றும் தோல்வி ”இவற்றை சாதுரியமாகக் கையாண்டால் வாழ்க்கைப் பயணம் இனிதே நடைபெறும்... வாழ்க்கையில் வெற்றி அடையலாம்.



**– எம்.கிருஷ்ணன்,**
**தொழிலதிபர்**




# எம் பதில்கள்



## கலைஞர் 99 பற்றி!

தான் கால்பதித்த கலை, எழுத்து, அரசியல் மற்றும் ஆட்சிப் பொறுப்பு உள்ளிட்ட அனைத்திலும் தனித்தன்மையோடு தன் முத்திரையைப் பதித்தவர் கலைஞர் கருணாநிதி. 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கும், போராட்ட வாழ்க்கைக்கும் சொந்தமானவர் அவர். உலக வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் பேரியக்கத்திற்கு அரை நூற்றாண்டுக் காலம் அசைக்கமுடியாத ஜனநாயகத் தலைவராக வலம் வந்தவர்.

5 முறை முதல்அமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் ஏழைஎளிய மக்கள் கல்வி, அறிவியல், சமூக பொருளாதாரத்தில் ஏற்றம் பெற்றிட எண்ணற்ற நல்ல பல சமூக நலத்திட்டங்களை திறம்படச் செயல்படுத்தி, இந்தியாவின் பல மாநிலங்களுக்கு முன்னோடியாகத் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்தவர்.

திருவள்ளுவர் தனது திருக்குறளில் குறிப்பிட்டுள்ள தந்தை, மகன் பெருமைக்கு கலைஞரும் அவர் மகன் ஸ்டாலினும் பொருத்தமானவர்கள்.

மு.க.ஸ்டாலின் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று செய்தியாளர் கேட்டபோது உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்று மூன்று முறை சொன்னார் கலைஞர்.

அவர் குறிப்பிட்டது போலவே மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற பின்பு ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கிறார். அவ்வபோது விமர்சனங்கள் எழுந்தாலும் கட்சி ஆட்சி இரண்டையும் தனது கைப்பிடிக்குள் வைத்திருக்கிறார் என்பது கலைஞர் என்ற தந்தைக்கு அவர் மகன் ஸ்டாலின் செய்யும் காணிக்கை ஆகும்.

## மோடியின் 8வருட ஆட்சி பற்றி....

கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் தேதி இரவு, 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என நரேந்திர மோடி அறிவித்தார். அதாவது அடுத்த 4 மணி நேரத்தில் ரூபாய் நோட்டுகள் செல்லுபடியாகாமல் போகும் என்றார். கருப்பு பணத்தை ஒழிக்கவும், நாட்டில் ஹவாலா பரிவர்த்தனையை ஒழிக்கவும் இந்த நடவடிக்கையை எடுப்பதாக மோடி தெரிவித்தார்.

அடுத்த பல மாதங்கள் வங்கிகளிலும் அஞ் சலகங்களிலும் மக்கள் நீண்ட வரிசையில் கால் கடுக்க நின்றனர். வங்கிகளில் தங்களின் பணத்தை மாற்றவும், ஏடிஎம்களில் பணம் எடுக்கவும் பலரும் பல மணி நேரம் காத்து கிடந்தனர். இதில் சிலர் உயிரிழக்கவும் நேரிட்டது. இந்த பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் எவ்வளவு கருப்பு பணம் ஒழிக்கப்பட்டது என்பதற்கான எந்த விடையும் இதுவரை இல்லை. நாட்டின் வரி அமைப்பை ஒழுங்குப்படுத்த மோடி அரசு ஜிஎஸ்டியை அறிமுகப்படுத்தியது. ஒரே ஜிஎஸ்டியை கொண்டு வருவதுதான் முதல்கட்ட யோசனையாக இருந்தது.

மத்திய மாநில அரசுகளுக்கு இடையே பல்வேறு குழப்பங்கள் நிலவின. இன்றைய நிலையிலும் தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் தங்களுக்கான ஜிஎஸ்டி நிலுவை தொகை கிடைப்பதில்லை என்று தெரிவிக்கின்றன.

8 வருட ஆட்சிக் காலத்தில் மோடி பெண்கள், குழந்தைகள் மற்றும் பிற ஒடுக்கப்பட்டவர்களை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களை தொடங்கியுள்ளார்,

அந்த வகையில் 2016ஆம் ஆண்டு மே 1ஆம் தேதி உஜ்வாலா யோஜனா திட்டத்தை தொடங்கி வைத்தார் மோடி. அதாவது மூன்று வருடங்களில் 5 கோடி கேஸ் இணைப்புகளை வழங்குவதாக அவர் உறுதியளித்தார். இது பெண்களை கறி அடுப்பில் சமைக்கும் சிரமங்களிலுருந்து விடுவிக்கும் என்றார்.

ஜன் தன் திட்டம் மூலம் அனைத்து இந்தியர்களுக்கும் வங்கி கணக்கு என்ற நடைமுறையை அறிமுகப்படுத்தினார் மோடி. அரசின் திட்டங்கள், அரசின் ஒரு லட்ச மதிப்பிலான இலவச காப்பீடு ஆகியவை இந்த திட்டங்கள் மூலம் பயனாளிகளை சேரும். இந்த திட்டத்தின் மூலம் 45 கோடி

கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், அதில் ஒரு லட்சத்து 67 ஆயிரம் கோடி நிதி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவிக்கிறது.

அதேபோல் ஆயுஷ்மான் பாரத் திட்டம் மூலம் ஏழை மக்களுக்கு காப்பீடு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் மோடி. இதை பயன்படுத்தி மருத்துவமனைகளில் இலவச சிகிச்சைகளை பெற்று கொள்ளலாம்.கோவிட் காலத்தில் பலருக்கும் உதவியாக இருக்கும் என்பதுதான் இதன் நோக்கம். ஆனால் சில தொழில்நுட்ப பிரச்னைகளாலும், பிற பிரச்னைகளாலும் இந்த காப்பீட்டை பயன்படுத்தி சிகிச்சை பெற முடியவில்லை என பலர் புகார் தெரிவித்தனர்.

இந்த திட்டங்கள் மோடியின் வெற்றிகரமான திட்டங்களாக பார்க்கப்படுகிறது. அதே சமயம் இவை விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளன. இந்த திட்டங்கள் மோடியையும் பாஜகவையும் மேலும் பிரபலமாக்கியது என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

## அன்புமணி பா.ம.க. தலைவராகியிருக்கிறாரே?

1989ல் டாக்டர் எஸ். ராமதாஸால் துவக்கப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவராக தீரனும் அதற்குப் பிறகு எடப்பாடி கணேசனும் இருந்தனர். இந்த நிலையில், 1998ஆம் ஆண்டு முதல் ஜி.கே. மணி அக்கட்சியின் தலைவராக இருந்து வருகிறார். அக்கட்சியின் வரலாற்றில் நீண்ட காலம் தலைவராக இருந்தவர் ஜி.கே. மணிதான். ஆறு மக்களவைத் தேர்தல்களையும் ஐந்து சட்டப்பேரவைத் தேர்தல்களையும் இவரது தலைமையில்தான் பாட்டாளி மக்கள் கட்சி எதிர்கொண்டிருக்கிறது.

2024ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து, கட்சிக்குப் புதிய தலைவரை நியமிக்க அக்கட்சி முடிவு செய்தது. அதன்படி, அக்கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரும் கட்சியின் இளைஞரணித் தலைவருமான அன்புமணி ராமதாஸை புதிய தலைவராக நியமிக்க சென்னையில் கூடிய அக்கட்சியின் சிறப்புப் பொதுக் குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.



"அன்புமணி ராமதாஸிற்கு இளம் தலைவர். படித்த தலைவர் என்ற பெயர் இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி அனைத்து மக்களுக்குமான கட்சி என்ற தோற்றத்தை அளிக்க அவர் தொடர்ந்து முயன்று வருகிறார். அவரின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறோம்!

தமிழக ஆளுநரும் உயர்கல்வித் துறை அமைச்சரும் பங்கேற்ற 13 ஆவது பட்டமளிப்பு விழாவில் M.phil பட்டம் பெறும் எம்.லலிதா.



## இனி M.phil படிப்பு இல்லையாமே?

அனைத்து பல்கலைக் கழகங்களிலும் நடத்தப்பட்டு வரும் **M.Phil** பட்டப் படிப்பு 2022-2023ம் கல்வி ஆண்டு முதல் செல்லாது என்றும், அடுத்த கல்வி ஆண்டு முதல் எம்.பில். பட்டப் படிப்பை நிறுத்திவிடவும் பல்கலைக் கழக மானியக்குழு திட்டமிட்டுள்ளது.

பல்கலைக் கழகங்களில் முதுநிலை பட்டப்படிப்பு முடித்தவர்கள் அடுத்ததாக எம்ஃபில் என்ற பட்டப்படிப்பை முடித்தால் தான் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர் பணிக்கான தகுதியாக வைக்கப்பட்டது. கடந்த 1977ஆம் ஆண்டு முதல் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டது எம்.பில். ஆசிரியர் பணியில் இருப்போர், முதுநிலைப் பட்டத்துக்கு பிறகு எம்ஃபில் பட்டம்பெற்றிருந்தால், அவர்களுக்கு ஊக்கத்தொகையும் பெற வசதியாகவும் எம்.பில் பட்டம் இருந்தது.

இந்நிலையில் தான் பல்கலைக் கழக மானியக் குழு இந்த முறையை தற்போது மாற்றி, ஆசிரியர் பணிக்கு குறைந்தபட்ச தகுதியை கொண்டு வந்துள்ளது. இதன்காரணமாக எம்ஃபில் பட்டம் எந்த கற்பித்தல் பணிக்கும் தகுதியற்றதாக தற்போது மாற்றியுள்ளது.

அதாவது, பல்கலைக் கழக மானியக் குழுவின் முனைவர் பட்டம் (பிஎச்டி) வழங்குவதற்கான குறைந்த பட்ச தரம் மற்றும் விதிகளுக்கான மசோதா) ஒழுங்குமுறைகள் 2022ம் ஆண்டுக்கானது இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளபடி அடுத்த கல்வி ஆண்டில் எம்ஃபில் பட்டம் என்பது இருக்காது. இந்த அறிவிப்பு வரை வழங்கப்பட்ட எம்.பில்., பட்டங்கள் செல்லுபடியாகும். சென்னைப் பல்கலைக் கழகம் கடந்த ஆண்டே எம்ஃபில் பட்டப்படிப்பை நிறுத்தி விட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சென்னை திறந்த வழி பல்கலைக் கழகத்தின் கடைசி பேட்ச் மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது.



# லாபம் தரும் இயற்கை விவசாயம்!

**இ**யற்கை முறையில் சாகுபடி செய்யும் பொருட்கள் விலை அதிகமா?

"பாரம்பரிய உணவு பொருட்கள் காப்போம்!! ஆர்கானிக் உடலுக்கு நலம்!! என கிளம்புவது எல்லாம் வியாபாரத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டவை.." என்று சிறிதும் யோசிக்காமல் பலர் சமூக வலைதளங்களில் கருத்து கூறி வருகின்றனர்.

ஒரு இயற்கை விவசாயி என்ற வகையில், இயற்கை விவசாயமும், பாரம்பரிய அரிசி வகைகள் விலையும் என்பது பற்றி நட்புக்களோடு ஒரு சிறு கருத்து பரிமாற்றம்.

விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது யார்? என்பதை யோசித்திருக்கிறீர்களா?

இங்கு பாவப்பட்டவன் விவசாயி மட்டுமே! தான் விளைவித்த எந்த ஒரு பொருளுக்கும் நிச்சயமாக எந்த ஒரு விவசாயியும் விலை நிர்ணயம் செய்ய முடியாது. இடைத் தரகர்களும், அரசு கொள்முதல் நிலையங்களும், வியாபாரிகளும் மட்டுமே இதை செய்கிறார்கள்.

சாதாரணமாக இரசாயன உரங்கள் இட்டு பயிர் செய்யும் விவசாயிகள், அதிக விளைச்சலைக் கொடுக்கும் குறிப்பிட்ட 10 (ஒட்டு) ரகங்களுக்குள் மட்டுமே பயிர் செய்கிறார்கள். இவர்கள் நச்சுத்தன்மை வாய்ந்த "களைக்கொல்லி" மற்றும் "பூச்சிக்கொல்லி" இவற்றை பயன்படுத்தி செலவு அதிகமில்லாமல் அறுவடை செய்து விடுகின்றனர்.

அதையும் (DPC) நேரடி கொள்முதல் நிலையங்களில் கொடுத்து விட்டு, "பை" அரிசியை வாங்கி வீட்டுக்கு கொண்டு வருகின்றனர். பெரிய அளவில் பயிர் செய்பவர்கள் அதை பளபளா பாலிஷ் அரிசியாக்கி விற்பனைக்கு கொண்டு வந்து விடுகின்றனர். பார்ப்பதற்கு பளபளப்பாக இருக்கும் இத்தகைய அரிசிக்கு பழக்கப்பட்ட மக்கள், நுகர்வுக் கலாசாரத்தால் சிதைவுற்றுப் போயிருக்கும் அந்த அரிசியை அதிக விலை கொடுத்து வாங்கி பயன்படுத்துகின்றனர்.

நமக்கு அரிசி குறித்தான சரியான புரிதல் இல்லை என்பதே உண்மை. தன்னகத்தே அளப்பரிய கலாசாரம் மற்றும் பண்பாட்டு அடையாளத்தைக்கொண்டிருப்பவை நமது பாரம்பரிய நெல்அரிசி இரகங்கள்.

ஐ.ஆர்.ஆர்.ஐயின் தலைவர் ரிச்சாரியா, இந்திய அளவில் ஒரு லட்சத்து அறுபதாயிரம் வகையான அரிசி ரகங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

ஆனால் தற்போது மீட்டெடுக்கப்பட்டவை மிகச் சிலவே. ஐயா நம்மாழ்வாரும், ஐயா நெல் ஜெயராமன் அவர்களும் மீட்டெடுத்துக் கொடுத்த இரகங்களை பாதுகாக்கவே அரும்பாடு படவேண்டி உள்ளது. இன்னும் மீட்டெடுக்கப்பட வேண்டிய தொலைந்த இரகங்கள் எத்தனை எத்தனையோ!! இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு பாரம்பரிய நெல் பயிர் செய்பவர்களும் பாடுபடுகிறார்கள்.



இயற்கை முறையில் பாரம்பரிய நெல் பயிர் செய்யும் விவசாயிகள், நஞ்சற்ற முறையில் விளைவிக்க எத்தனை பாடுபட வேண்டி உள்ளது தெரியுமா?

அடியுரமாக எரு, மக்கிய தொழு உரம் இடுதல் வேண்டும். தொழு உரம் கிடைப்பது கடினம். அதற்காக மாடு வளர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாடு வளர்த்தால் எரு கிடைத்தது விடும். ஆனால் மாடு பராமரிப்பு செலவு?

இந்த மண் மீதும், மக்கள் சமுதாயத்தின் மீதும் அக்கறை உடைய ஒவ்வொரு இயற்கை விவசாயியும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என இவற்றை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்கிறான் என்பதை அறிவீர்களா? ஒரு இயற்கை விவசாயி தான் வாங்கிய இரசாயன உரங்கள் இட்ட வயலின் மண்வளத்தை முழுமையாக இயற்கைக்கு மாற்றுவது வரை அவருடைய ஒவ்வொரு கட்டத்திலும் மகசூல் கிடைக்குமா என்பது கேள்விக்குறி. அதாவது சராசரிக்கும் குறைவான அளவே மகசூல் இருக்கும்.

இந்த மண் மலட்டுத்தன்மை அடையாமல் வருங்கால சந்ததியினருக்கு பாதுகாத்து தருதல் வேண்டும் என்ற உறுதி அவர்களுக்குள் கனவாக, கனலாக இருப்பதை புரிந்து கொள்ளுங்கள்.

மண் நச்சுத்தன்மை அடைய கூடாது என்பதால் இயற்கை விவசாயி நெல் நாற்று நடவு செய்து, கை களை எடுக்க வேண்டி உள்ளது. கை களை எடுக்க ஆகும் செலவு, களைக்கொல்லி செலவைவிட 5 மடங்குக்கும் மேல் ஆகும். மேலும் பூச்சி தாக்குதலில் இருந்து பயிர்களை பாதுகாக்க இயற்கை பூச்சி விரட்டிகள் அதிக முயற்சி செய்து தானே தயார் செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி பாரம்பரிய நெல் இரகங்கள் பயிர் செய்வதில் பல பிரச்சினைகளை திறனுடன் கையாள வேண்டிய அவசியம் இருக்கிறது.



அதிக மருத்துவ குணங்கள் உடைய கருங்குறுவை, நவரா போன்றவை உதிரும் தன்மை உடையவை. சரியான காலத்தில் அறுவடை செய்ய சுணக்கம் ஏற்பட்டால் (மழை போன்ற காரணங்களால்) விளைந்த நெல்மணிகள் அதிகம் உதிர்ந்து விடும். சில இரகங்கள் மிக அதிக உயரம் 6அடி முதல் 8 அடி உயரம் வளரக்கூடியவை. அவற்றை கண்ணும் கருத்துமாக பாதுகாப்பு செய்தல் வேண்டும். இன்னும் சில ரகங்கள் விளைய அதிக நாட்கள் ஆகும். மணிச்சம்பா, காட்டுயானம், மாப்பிள்ளை சம்பா, கருடன் சம்பா, கருப்பு கவுனி, கொட்டார சம்பா போன்றவை பயிராக 150-170 நாட்கள் வரை ஆகும்.

ஒட்டு இரகங்கள் 120 நாட்களில் அறுவடை செய்து விடும் போது, மேற்குறிப்பிட்ட பாரம்பரிய இரகங்களை, அதற்கு மேலும் 30-50 நாட்கள் வரை பாதுகாக்க வேண்டி உள்ளது. இந்த இரகங்களின் மருத்துவ குணங்களுக்காக பாரம்பரிய நெல் ஆர்வலர்கள் மிகவும்பொறுப்புடன் இதனை பயிர் செய்கின்றனர்.

இப்படி செய்யும்போது ஒரு விவசாயி தனது பயிருக்கு எவ்வளவு செலவு செய்து இருக்கிறார் என்ற கணக்கு அவரிடம் இருக்கும். அதோடு அவருடைய உழைப்பையும் மதிப்பிட்டு மேற்கொண்டு அவர் அந்த விவசாயத்தை தொடர்ந்து செய்திட அவருடைய விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்தால் மட்டுமே அவரால் ஜீவிக்க முடியும்.

ஆனால் அப்படி விளைவித்த போதும் அதனை விற்பனை செய்ய எல்லோராலும் முடிவதில்லை. அதற்கு தனித்திறமையும், இறைவன் கருணையும் (அதிர்ஷ்டம்) இருந்தால் மட்டுமே சாத்தியம். அது இல்லாத விவசாயிகள் மீண்டும் இடைத்தரகர்களிடமே தங்கள் பொருட்களை அடி மாட்டு விலைக்கு விற்கின்றனர்.

அவர்கள் அதிக இலாபத்தில் விற்கும் திறன் உடையவர்களாக இருப்பதால் அவர்களிடம் வாங்கும் நுகர்வோர் அதிக விலையை தரகர்கள் அல்லது பெரிய வியாபாரிகளிடம் கொடுத்து வாங்கி விட்டு இயற்கை முறையில் விளைந்த பொருட்கள் விலை அதிகமாக இருப்பதாகவும், இவை அனைத்தும் வியாபார நோக்கில் செய்யப்படும் போலி எனவும் புலம்புகின்றனர்.

சமுதாய நலன் காக்க அரும்பாடு பட்டு பயிர் செய்யும் இயற்கை விவசாயிகள் நலமுடன் இருந்தால் மட்டுமே, நஞ்சில்லா விவசாயத்தை தொடர்ந்து செய்ய பிற விவசாயிகளும் முன்வருவர். எனவே உங்கள் உடல் நலனிலும் வருங்கால சந்ததியினர் நலனிலும் அக்கறை உடைய ஒவ்வொருவரும், உங்கள் அருகில் உள்ள இயற்கை விவசாயிகளிடமிருந்து அல்லது உங்களுக்கு நன்கு பரிச்சயமான இயற்கை விவசாயிகளிடமிருந்து பொருட்களை வாங்க தொடங்குங்கள். நீங்களும் நலமுடன் வாழுங்கள். அவர்களையும் வாழ வையுங்கள்.

நஞ்சில்லா விவசாயம் மட்டுமே நலன் பயக்கும். நஞ் சில்லா விவசாயத்தால் வீடும், நாடும் நலம் பெறும்.

நன்மையை விதைப்போம். நன்மையை அறுவடை செய்வோம்.

*"ஏரும் இரண்டுளதாய்*
*இல்லத்தே வித்துளதாய்*
*நீரருகே உள்ள நிலம் உளதாய்*
*சென்று வர எளிதாய்*
*செல்வோனும் சொல் கேட்பின்*
*என்றும் உழவே இனிது "*

- **பா.லட்சுமிதேவி,** அம்பாசமுத்திரம்

# அறிஞர்கள் உலகம்

## நகைச்சுவைப் பேச்சாளர்புலவர் சண்முகவடிவேல்

திருவாரூர் இரெ. சண்முகவடிவேல் அவர்கள் நாடறிந்த நற்றமிழ்ப் புலவர்; தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பட்டிமண்டபங்களில் தமிழ் வளர்க்கும் இலக்கிய சொற்பொழிவாளர்; ‘தமிழகம் அறிந்த சான்றோர்’, ‘திருக்குறள் கதையமுதம்’ உள்ளிட்ட நூல்களை எழுதியவர். இவரும் புலவர் சீனி சண்முகம் அவர்களும் இணைந்து பங்கு பெறும் பட்டிமன்றங்கள் என்றால் நகைச்சுவைக்கு பஞ்சமிருக்காது. இவர்கள் இருவரோடும் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது. தமிழறிஞர்களோடு சேர்ந்து இலக்கியக் கூட்டங்களுக்கு செல்கையில் அவர்கள் பெற்ற அனுபவங்கள், சிலேடைப் பேச்சுக்கள், புதிரான வினாக்கள், சமயோசிதமான பதில்கள் இவைகளை மணிக்கணக்கில் கேட்டுக் கொண்டே இருக்கலாம். இன்பத்தமிழின் இலக்கியச் சுவையை இதமாக பருகியதில் இதயமெலாம் இன்புற்று மகிழும்.



புலவர் இரெ.சண்முக வடிவேல் அவர்கள் திருக்குறள் முனுசாமி அவர்களுடன் தனக்கேற்பட்ட சுவையான அனுபவங்கள் பற்றி சொன்னார்.

திருக்குறள் முனுசாமியார் திருக்குறளை சிரிக்கச் சிரிக்கப் பேசி யாவரையும் சிந்திக்கத் தூண்டுவார். நாங்கள் அவரோடு சேர்ந்து சென்ற நிகழ்ச்சிகள் பல உண்டு. அவ்வாறு அவரோடு போகும்போது அவர் பேசுவதும் நடப்பதும் நினைக்க நினைக்க இனிப்பன ஆகும்.

நாகூரில் இலக்கிய விழாவில் பேசவந்தார். தங்கியிருந்த இடத்திலிருந்து சொற்பொழிவு மேடை உள்ள இடம் ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். அழைத்துப்போக ஒரு கார் சொல்லியிருந்தோம். அந்த கார் உரிய நேரத்தில் வரவில்லை. நான் வாசலுக்கும் உள்ளுக்குமாகப் போய்வந்தபடி இருந்தேன். அதைக் கண்ட திருக்குறளார், “”ஏம்பா சண்முகவடிவேலு, நீ காருக்கு சொன்னேன்னு சொல்றியே அது கனவுலயா? நனவுலயா?” என்று கேட்டார்.

“உண்மையாவே சொல்லிவச்சேன்யா, ஏதோ காரணம் தெரியலே. அவனை இன்னும் காணலே.” என்றேன் நான்.

“அது ஏதாவது இருந்துட்டுப் போவுது, வா, நாம நடந்தே போவோம்.” என்று புறப்பட்டு வெளியில் வந்தார்.

நானும் அவரும் நண்பர் சீனி. சண்முகமும் பேசிக்கொண்டே நடந்து வந்தோம். அப்போது அவர் சொன்னார்,

“இப்ப நாம சேர்ந்து நடந்து போறது ரொம்ப நல்லதுப்பா. ஏன்னா இது பெரிய விளம்பரம். நூறு வால் போஸ்டர் அடிச்சு ஒட்டுனா மாதிரி ஆயிட்டுது. அதுசரி, நூறு போஸ்டர் அடிக்க எவ்வளவு செலவாகும்?” என்று கேட்டார்.

“இருநூறு ரூபா ஆகும்.” இது சீனி, சண்முகம்.

“அப்போ அந்த இருநூறு ரூபாயை என்கிட்டே குடுத்துடு.”

“சரிங்கய்யா.”

“சரின்னு சொன்னா போதாது. இப்பவே குடு.”

எல்லாரும் சிரித்து மகிழ்ந்து, நடந்த அசதி தெரியாமல் பேசுமிடம் சென்றோம்.

# தெளிவு

**-சித்ரா சுரேஷ்**

திண்ணையில் படுத்து மோட்டு வளையை பார்த்துக்கொண்டிருந்தார் சரவணன். அவர் ஒரு ரிடயர்ட் வங்கி அதிகாரி. அவருக்கு மாதம் பிறந்தால் பென்ஷன் வரும். அதனால் வீட்டில் அவருடைய நிலைமை வேறு. ஆனால் அவர் தன்னுடைய சினேகிதனை பற்றி நினைத்துக்கொண்டிருந்தார். அவர் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தவர். சரவணனின் மனைவி “ அண்ணா” என்று உரிமையோடு அழைத்து காபி போட்டு கொடுப்பாள். அவரும் ஆறு மாதங்கள் முன்பு ரிடயர்ட் ஆகி விட்டார். குமார்(சரவணனின் சினேகிதன்) மனைவி சிவகாமி, ஆறு வருடம் முன்பு இறந்து விட்டிருந்தாள். அதன் பின் அவர், தன்னுடைய மகனுடன் தான் தங்கியிருந்தார்.நேற்று இங்கு வந்திருந்த குமார், தன்னுடைய ரிடயர்ட் வாழ்க்கையை பற்றி பேசிக்கொண்டிருந்தார்.

“நான் எப்படி வாழ்ந்து கொண்டிருந்தேன்? இப்பல்லாம் காபிக்கு கூட என் மருமகள் கையை எதிர்பார்த்துக்காத்திருக்கிறேன். கடைக்கு போக, எதாவது வாங்க என் மகனின் கையை எதிர்பார்க்க





வேண்டியிருக்கிறது. என்ன வாழ்க்கை இது? என்று சரவணனின் மனைவி கீதாவிடம் புலம்பிக்கொண்டிருந்தார். அவர் மனைவி சின்ன புன்னகை உதிர்த்து விட்டு, “ இருங்க அண்ணா! காபி கொண்டு வரேன்” என்று சொல்லி விட்டு உள்ளே போனாள். சரவணனுக்கு நண்பன் நிலைமை பாவமாக இருந்தது. அத்தனை வேதனையிலும் “நல்ல வேளை நமக்கு பென்ஷன் வருது” என்று ஆசுவாசப்படுத்திக்கொண்டார். பின் நண்பரை பார்த்து” நீ ஏண்டா இது பத்தி யோசிக்கிறே; நான் இருக்கேன் இல்ல; இங்க வா! உனக்கு வேண்டியது கிடைக்கும்” என்று ஆசுவாசப்படுத்தினார். அதற்குள் கீதா வர, காபியை வாங்கி அருந்தி விட்டு கிளம்பி போய் விட்டார். ஆனால் இது, சரவணன் மனதில் இது நிழலாடிக்கொண்டே இருந்தது. நாளை நம் நிலைமை என்ன? என்பது அவருக்குள் பூகம்பத்தை ஏற்படுத்தியது.

அன்று வழக்கம் போல் இவரும் மனைவியும் மொட்டை மாடிக்கு போனார்கள்.ஈசிசாரில் அமர்ந்து கொண்ட இவர், முகத்தில் வழக்கமான அமைதி இல்லை. மனைவி அருகில் அமர்ந்தவள்” என்ன ஆச்சு”? என்று கேட்டாள்.

“இல்லம்மா! குமார் பேசி விட்டு போனதில் இருந்து மனசே சரியில்லை; அதான்” என்றார். புன்னகை புரிந்தாள் மனைவி. “ என்னம்மா; சிரிக்கிறே!” என்றார்.



“பின்ன என்ன பண்ணச்சொல்றீங்க? எனக்கு அழறதா; சிரிக்கறதா' தெரியல.” எனக்கு புரியறது உங்களோட மன நிலைமை; ஆனால் வாழ்க்கை அழகானது; வாழற ஒவ்வோரு நாளும் நாம் சந்தோஷமா வாழனும். அது தான் நமக்கு நிம்மதியை கொடுக்கும். அண்ணா அப்படி சொல்லிட்டு போனதில் இருந்து நீங்க கற்பனை பண்ண ஆரம்பிச்சுட்டீங்க: ஆனால் இது எதுவுமே நடக்காமல் கூட போகலாம்.நிம்மதியா கூட இருக்கலாம் இல்லையா? ஆண்கள் அதுவும் வீட்டின் தலைவன், ஒரு அதிகார நிலைமையில் இருந்தே பழகிட்டாங்க. அதனால் அவங்களுக்கு அது கையை விட்டு போய்டுச்சுன்னு புலம்ப ஆரம்பிச்சுடறாங்க; ஆனால் இது தான் வாழ்க்கையின் போக்கு ன்னு தெரியும் போது,55 வயதில் இருந்தே அதற்காக மனதையும் உடலையும் தயார் செய்துக்கணும். அந்த வயதில் இருந்தே பக்கத்தில் இருக்கும் கோவிலிலோ மற்ற இடங்களிலோ சேவை செய்ய ஆரம்பிக்கலாம். கொஞ்சம் கொஞ்சமாக சுற்றி இருக்கும் பிள்ளைகளுக்கு உங்களுக்கு தெரிந்த கல்வியை அல்லது சத் விஷயங்களை கற்றுக்கொடுக்கலாம். நம் இல்லங்களில் நாம் போய் நம் குடும்ப உறுப்பினருடன் பேசலாம். உதவிகள் செய்யலாம்.என்ன தப்பு?

இப்போ நீங்கள் பரவாயில்லை; மனைவி இருக்கும் வரையில் கணவருக்கு செய்வாள். ஆனால் பெண்கள் அதுவும் எங்கள் வயது பெண்கள் அதுவும் இல்லத்தரசிகள் முதலில் கணவரையும் அதன் பின் பிள்ளைகளையும் நம்பியே வாழ வேண்டியுள்ளது. எங்களுக்கு என்றே இருக்கும் சமையலறை சாம்ராஜ்யம் கூட பல நேரங்களில் வரும் பெண் கைவசம் போய் விடுகிறது. தலைவியின் ஸ்தானத்தில் இருப்பவள், உதவியாளராக மாற வேண்டிய சூழல். திடீரென்று அப்படி ஒரு நிலைமை வந்தால், மனம் தாங்காது என்று தான் நான் மனதை கொஞ்சம் கொஞ்சமாக பக்குவப்படுத்த ஆரம்பிச்சுட்டேன். என்னை சத் விஷயங்கள் ஈடுபடுத்த ஆரம்பிச்சுட்டேன். இப்படி பக்குவப்படுத்த ஆரம்பிச்சுட்டா வீடுகள்ல ஏங்க சண்டை வரப்போறது? சொல்லுங்க? என்றாள்.சரவணன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்.

மறு நாள் கோவிலுக்கு போய் இருந்தார்கள் சரவணனும் மனைவியும். அப்போது அங்கே வந்து இருந்தார்கள் ராஜுவும் மனைவியும். ராஜு,”ஹாய் ஆண்டி ! என்றான். மெல்ல அவனை தனியே அழைத்துச்சென்ற சரோஜா(சரவணன் மனைவி) “ கொஞ்சம் உக்காந்து பேசலாமா? என்றாள். வாங்க ! ஆண்டி “ என்றான். கீழே அமர்ந்த அவனிடம் மெதுவாக,” நீ என் கிட்ட வளர்ந்த பிள்ளை அந்த உரிமையில் சொல்றேன்; நீ ஒரு வேலை செய் ! இது ஒரு விண்ணப்பம் தான். வற்புருத்தல; உன் அப்பாக்கு ன்னு ஒரு அக்கவுன்ட் ஆரம்பிச்சு அதுல கொஞ்சம் பணம் போட்டு அந்த கார்ட அவர் கிட்ட கொடுத்துடு; இப்படி பண்றதால அவர் மனசுல ஒரு சுதந்திரமான உணர்வு ஏற்படும். அதனால மன நிம்மதியோட இருப்பார் இல்லையா ! என்ன சொல்ற ! கேட்டாள் சரோஜா.” சரி ஆண்டி அப்பா கொஞ்ச நாளாவே எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கார். இப்ப புரிஞ்சுண்டேன். இனி பாத்துக்கறேன் ஆண்டி” என்றான். சரிப்பா ! நான் கிளம்பறேன்” சொல்லி விட்டு கிளம்பினாள். மனதில் ஒரு ஆழ்ந்த நிம்மதி வந்து இருந்தது. சரவணனை பார்த்தாள். அவர் முகத்தில் ஒரு தெளிவு தெரிந்தது. புன்னகை பூக்க கோவில் கோபுரத்தை பார்த்து கை கூப்பிய சரோஜா இறைவனின் விளையாட்டை எண்ணி மௌனமாக புன்முறுவல் பூத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

தொடர் 6

நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

# உச்சநீதிமன்றத் தீர்ப்பும், கவர்னரின் அதிகாரமும்!

துடுப்பதி ரகுநாதன்

நாடு முழுவதும், ஏன் உலகம் முழுவதும் ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப் பட்டு 30 வருடங்களாக சிறையில் அடைக்கப் பட்டிருந்த பேரறிவாளன் என்பவரை விடுதலை செய்த தீர்ப்பு பற்றி பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள்!

எல்லா வகை ஊடகங்களும் அரசியல் தலைவர்கள், அறிஞர்களின் கருத்துகளைப் போய் கேட்டு டி. வி. சானல்களில் ஒளி பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்!

நமக்கும் மகிழ்ச்சி தான்! இனிமேலாவது பேரறிவாளன் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி மகிழ்ச்சியோடு வாழ வாழ்த்துகிறோம்!

இந்த தீர்ப்பு ஒரு வழக்குக்குச் சொல்லப்பட்ட தீர்ப்பு மட்டுமல்ல அல்ல! இந்தியாவில் வாழும் சுமார் 130 கோடி மக்களுக்கும் புரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்ட ஒரு அறிவுரையாகும்!

பிரதமர், முதல்வர், கவர்னர், மற்றும் ஏன் உச்ச நீதி மன்றமாக இருந்தாலும் இந்திய ஒன்றியத்தில் வாழும் அனைவரும் இந்திய அரசியல் சாசனத்திற்கு கட்டுப்பட்டவர்கள் என்பதை இந்த தீர்ப்பு தெளி படுத்தியிருக்கறது!



இந்த தீர்ப்பே இந்திய அரசியல் சாசன சட்ட விதிகளின்படி தான் வழங்கப் பட்டிருக்கிறது! இந்தத் தீர்ப்பு பேரறிவாளன்



அரசியல் சாசனத்தின் எந்த விதியின்படி விடுதலை செய்யப் பட்டிருக்கிறார் என்று மட்டும் சொல்லி விட்டு நிற்க வில்லை!

அரசியல் சாசனப்படி கவர்னருக்கு என்ன அதிகாரம், மாநில முதல்வர்களுக்கு என்ன அதிகாரம், மாநில சட்ட சபைக்கு என்ன அதிகாரம் என்றெல்லாம் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது!

மாநில அரசுகள் மட்டுமல்ல, ஒன்றிய அரசுமே இந்திய அரசியல் சாசனத்திற்கு கட்டுப் பட்டுத்தான் நடக்க வேண்டும் என்று தெளிவு படுத்தியுள்ளது!



பாராளும் மன்றத்திற்கே அரசியல் சாசனத்தில் சில சட்டத் திருத்தங்கள் தான் கொண்டு வரத் தான் முடியும்! சட்டத் திருத்தம் என்ற பெயரில் அடிப்படைகட்டுமானத்தை மாற்ற உரிமை இல்லை என்று ஏற்கனவே வந்த உச்ச நீதி மன்றத் தீர்ப்புகளில் சொல்லப் பட்டிருக்கிறது!




சமீப காலமாக தமிழ் நாட்டில் தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற நிலை உருவாகி வருகிறது!

இந்திய அரசியல் சாசனப்படி யாருக்கு என்ன அதிகாரம் என்று ஆளுநர் முதல் எந்த அரசியல் தலைவர்களுக்கும் இன்று வரை தெரியாமல் இருப்பது, இன்றைய உச்ச நீதி மன்ற தீர்ப்பால் தான் நமக்கு தெரிய வருகிறது!

சாதாரண பொது மக்களுக்கு இந்த சட்ட நுணுக்கம் தெரியாமல் இருப்பது பெரிய விஷயமில்லை! ஆனால் மெத்த படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மாநில சட்ட சபை தமிழ்... தமிழ்... என்று சொல்லிக் கொண்டு மாநில கல்விக் கொள்கையில் எங்கள் இந்தித் திணிப்புக்கு எதிராக தமிழ் நாடு சட்டசபையில் எந்த புதிய சட்டம் கொண்டு வந்து தீர்மானம் நிறை வேற்றினாலும், அவைகளை ‘நீட் தேர்வு ரத்து’ தீர்மானம் போல் அவைகளையும் ஆளுநர் மூலம் கிடப்பில் போட்டு விடுவோம் என்று தைரியமாக பேசுகிறார்கள்!

அவர்களுக்கு துணையாக குற்றம் புரிந்து அடிமைகளாக மாறியவர்களும், வசதி வாய்ப்புகளுக்காக புரோக்கர்களாக மாறியவர்களும் சேர்ந்து கொண்டு மாநில அரசுகளுக்கு எந்த அதிகாரம் இல்லை என்றும், மத்தியில் இருக்கும் அரசின் பிரதமர் இந்தியா என்ற கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர் போலவும், இங்கு இருக்கும் மாநில முதல்வர் அவரிடம் கை கட்டி சம்பளம் வாங்கும் கிளை மேனேஜர் போலவும் ஒரு எண்ணத்தை தமிழக மக்கள் மத்தியில் உருவாக்கி வருகிறார்கள்!

அரசு விளம்பரம் என்று பல கோடிகளை எடுத்து வீசி, ஜனநாயகத்தின் ஒரு தூணாகக் கருதப் படும் முக்கிய பத்திரிகைகளை விலைக்கு வாங்கப் படுவதையும் நம் மாநிலத்தில் ஏற்கனவே நாம் பார்த்திருக்கிறோம்! இந்தப் போக்கு நீடித்து கொண்டே போனால் தமிழ் நாட்டின் அமைதி கெட்டுப் போய் விடும்! பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழி வந்தவர்கள் இந்த தாடி விஷயத்தில் இப்படி அலட்சியம் காட்டுவது நல்லதல்ல!

உச்ச நீதி மன்றத் தீர்ப்பு நகல் வந்தவுடன் நமது தமிழ் நாடு அரசு இந்த கலைஞர் பிறந்த நாளில் இந்திய அரசியல் சாசனப்படி யார் யாருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதையும் கவர்னர் என்பவர் மாநில சட்டசபை கொண்டு வரும் சட்டங்களை நிறைவேற்றும் ஒரு கருவி என்று உச்ச நீதி மன்றம் இன்று சொன்னதையும் ஒரு குழுவை நியமித்தாவது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது மாநில அரசின் கடமையாகும்!

# மனிதர்களுக்கு எப்போது புரியும்!

பலமுறை பல ஆண்டுகளாக கேட்டு வருகின்ற ஒரு கதைதான். ஆனால் அது இப்போது படிக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. அந்தக் கதை இதுதான். ஓர் ஊரில் பெரிய கோயிலில் கோபுரத்தில் நிறைய புறாக்கள் வாழ்ந்து வந்தன, திடீரென்று கோயிலில் திருப்பணி நடந்தது. அதனால் அங்கு வாழ்ந்த புறாக்கள் வேறு இடம் தேடி பறந்தன.


வழியில் ஒரு தேவாலயத்தை பார்த்தன. அங்கு சில புறாக்கள் இருந்தன. அவைகளோடு இந்த புறாக்களும் அங்கு குடியேறின.

சில நாட்கள் கழித்து கிறிஸ்துமஸ் வந்தது. தேவாலயம் புதுப்பிக்க தயாரானது. இப்போது இங்கு இருந்து சென்ற பறவைகளும் அங்கு இருந்த பறவைகளும் வேறு இடம் தேடி பறந்தன. வழியில் ஒரு மசூதியை கண்டது அங்கும் சில புறாக்கள் இருந்தன.

அவைகளோடு இந்த புறாக்களும் குடியேறின சில நாட்கள் கழித்து ரமலான் வந்தது வழக்கம் போல் இடம் தேடி பறந்தன.

இப்போது மூன்று இடத்திலும் உள்ள புறாக்களும் கோயிலில் குடியேறின. கீழே மனிதர்கள் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் வெட்டி சாய்த்துக்கொண்டு இருந்தனர்.

ஒரு குஞ்சுப்புறா தாய் புறாவுடன் கேட்டது "ஏன் இவர்கள் சண்டை போடுகிறார்கள் ?" என்று...



அதற்கு அந்த தாய் புறா சொன்னது "நாம் இங்கு இருந்த போதும் புறா தான், தேவாலயத்துக்கு போனபோதும் புறா தான், மசூதிக்கு போன போதும் புறா தான் ", "ஆனால் மனிதன் கோயிலுக்கு போனால் இந்து" "சர்ச்க்கு போனால் "கிறிஸ்த்தவன்" "மசூதிக்கு போனால் "முஸ்லிம்" என்றது; குழம்பிய குட்டி புறா "அது எப்படி நாம் எங்கு போனாலும் புறா தானே அதுபோல தானே மனிதர்களும் "என்றது. அதற்கு தாய் புறா "இது புரிந்ததனால் தான் நாம் மேலே இருக்கிறோம், இவர்கள் கீழே இருக்கிறார்கள்" என்றது..

எஸ்.சூர்யா



# How to Spend Holidays for Students

Dear friends!

Vacation is a wonderful period especially when you are students because the number of days you get will be more when compared to working employees or others. Usually, students spend their vacation playing games, it can be any outdoor or indoor. Nowadays most of the students spend their vacations playing PlayStation.




Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)


Though I totally agree that during vacations you need to enjoy, relax and have fun, but it will be even more better if you can make it productive.

Now you will not be spending all day with friends or playing games, at one point of time, you will feel bored during your vacation. So instead of experiencing that boredom, it is better to use that time in doing something productive.

- Learn something new
- Try taking up a new hobby
- Make reading a hobby
- Practice how to write thank-you notes
- Start a conversation with career professionals
- Brush up your typing skills
- Manage your money well
- Take up courses online
- Stop by a college or university
- Go meet your old friends and relatives
- Set up an athletic goal
- Try to fix or repair something
- Try developing your vocabulary
- Plan a picnic
- Declutter
- Inculcate healthy habits
- Try to know about your family history
- Improve your reading speed
- Master time management skills
- Find a mentor
- Start a personal website or blog
- Clear your email account
- Watch TED talks
- Browse and read articles that interest you and help you
- Improve writing skills
- Apply for internship
- Review your last semester performance
- Plan something better for next semester
- Watching interesting and knowledgeful videos on youtube
- Try documentaries
- Get a part-time job
- Sell your old or unused items
- Try learning new languages
- Do something for a cause which you like
- Go visit a museum
- Become a volunteer
- Work on your physical health
- Plan and start a business



MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 JUNE 2022



தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனரும் தலைவருமான திரு.பெ. ஜான்பாண்டியன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் நிர்வாக குழு தலைவர் திருமதி ஜா.பிரிசில்லா பாண்டியன் இணையரின் அருந்தவப் புதல்வி டாக்டர்.ஜா.வினோலின் நிவேதா – டாக்டர். ஆர். டி .நவீன் (திருப்பூர் கே.என்.ரங்கராஜன், திருமதி ஆர்.தனலட்சுமி இணையரின் மகன்) திருமண வரவேற்பு 31.5.2022 செவ்வாய்க்கிழமை மாலை சென்னை திருவான்மியூர் ஸ்ரீ ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடந்தது. நிகழ்ச்சியில் மித்ரா டைம்ஸ் ஆசிரியரும், மித்ரா நிறுவன குழுமங்களின் தலைவருமான திரு. எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் தமது குடும்பத்தினருடன் பங்குகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY